

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 134 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 8 – ஞாயிற்றுக்கிழமை 24 டிசம்பர் 2023 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 134 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 8 - Sunday 24 December 2023 - Dak 8 Pages ₹ 5.00


## நாடு சமத்துவமாகத் திகழ்ந்திடவேண்டும்!

# இயேசுவின் குணங்களை யாராலும் மதிப்பிட முடியாது!

## ‘கிறிஸ்துமஸ் பெருவிழா’வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, டிச. 24-**

**சென்னை பெரம்பூரில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில் பங்கேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது “நாடு சமத்துவமாகத் திகழ்ந்திட வேண்டும்” என்றும், “இயேசுவின் குணங்களை யாராலும் மதிப்பிட முடியாது” என்றும் கூறினார்.**

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.12.2023) மாலை பெரம்பூர் தொன் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் கழகச் சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பில் நடத்தப்பட்ட “அன்பின் இனிய கிறிஸ்துமஸ் பெருவிழா – 2023”ல் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு :–

அன்பின் கிறித்துவ சகோதர சகோதரிகள் அனைவர்க்கும் என் இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்! இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள். நடப்பது கிறிஸ்துமஸ் விழா. நடத்துவது இந்து சமய அறநிலையத் துறை



அமைச்சராக இருப்பவர். இதுதான் நமது பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்.

### கிறிஸ்துமஸ் விழாவை - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நடத்துவதுதான் திராவிட மாடல் அரசு!

சொன்னது போல் திராவிட மாடல் அரசு. நம்முடைய சேகர்பாபு அவர்களுக்குத் தோளோடு தோள் கொடுத்து, வழிகாட்டக் கூடியவராக இருப்பவர் மதிப்புக்குரிய தமிழ்நாடு சிறுபான்மை

**இந்த சமத்துவப் பெருவிழாவை வாழ்த்திப் பாராட்டுகிறேன்!**

அதேபோல் நம்முடைய கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் இனிகோ இருதயராஜ் அவர்களும், கழகச் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுச் செயலாளர் சுபேர் கான் அவர்களும் இந்த விழாவை சிறப்போடு நடத்துகிறார்கள். சேகர்பாபு – பீட்டர் அல்போன்ஸ் – இனிகோ இருதயராஜ் – சுபேர் கான் இணைந்து நடத்தும் இந்தக் கிறிஸ்துமஸ் பெருவிழா சமத்துவப் பெருவிழாவாக அமைந்துள்ளது. இதற்காகவே இவர்களைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

**98 சதவிகிதம் பேருக்கு நிவாரணம்! மீதமுள்ளவர்களுக்கும் வழங்கப்படும்!**

நம்முடைய இந்திய நாடு என்பது, பல்வேறு மதங்களைப் பின்பற்றும் மக்களும் ஒற்றுமையாக வாழும் நாடு. வேறு வேறு மத நம்பிக்கைகள் இருந்தாலும் அது அவர்கள் அவர்களுக்குச் சொந்தமானதாகத்தான் இருக்குமே தவிர மற்றவர்களுக்கு எதிரானதாக இருக்காது. ஏன் என்றால் எல்லா மதமும் அன்பை மட்டும்தான் வலியுறுத்திச் சொல்கின்றன. எந்த மதமும் வேறுபாட்டைப் போதிப்பது இல்லை. அதனால்தான் கழகச் சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு சார்பில் நடக்கும் இந்த கிறிஸ்துமஸ் பெருவிழாவுக்கு எல்லா மத நம்பிக்கையாளர்களும் வந்திருக்கிறார்கள்.

> “நம்முடைய இந்திய நாடு என்பது, பல்வேறு மதங்களைப் பின்பற்றும் மக்களும் ஒற்றுமையாக வாழும் நாடு. வேறு வேறு மத நம்பிக்கைகள் இருந்தாலும் அது அவர்கள் அவர்களுக்குச் சொந்தமானதாகத்தான் இருக்குமே தவிர மற்றவர்களுக்கு எதிரானதாக இருக்காது. ஏன் என்றால் எல்லா மதமும் அன்பை மட்டும்தான் வலியுறுத்திச் சொல்கின்றன. எந்த மதமும் வேறுபாட்டைப் போதிப்பது இல்லை. அதனால்தான் கழகச் சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பில் நடக்கும் இந்தக் கிறிஸ்துமஸ் பெருவிழாவுக்கு எல்லா மத நம்பிக்கையாளர்களும் வந்திருக்கிறார்கள்.”

இந்த மேடையைப் பாருங்கள். மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பால சுவாமிகள், மேனாள் நீதியரசர் என். பாஷா என்று நாம் எல்லோரும் ஒற்றுமையாக சகோதரர்களாக இருக்கிறோம். இந்த ஒற்றுமை உருவாக இன்றைக்கு நாம் கூடியிருக்கிறோம். ஆனால், இந்த ஒற்றுமை உருவாவதைச் சிலரால் சகித்துக் கொள்ள முடியவில்லை, அரசியல் லாபங்களுக்காக மதத்தை பயன்படுத்துபவர்களால் மத ஒற்றுமையையும் மத நல்லிணக்கத்தையும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதனால் தான் இந்த ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தப் பாடுபடும்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## வரலாறுகாணா மழை வெள்ளம் பாதித்த பகுதிகளில் மக்களோடு மக்களாக இருந்தவர் நம் முதல்வர்!

## தி.மு.க. அரசை அவமானப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு - பேரிடரில் சிக்கித் தவிப்போரின் துயரம் அறியாமல்

# தமிழ்நாட்டு மக்களை அவமானப்படுத்தியுள்ளார் ஒன்றிய நிதியமைச்சர்!

## நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கடும் கண்டனம்!

**சென்னை, டிச.24–**

**தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் வரலாறு காணா பெருமழை, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களோடு மக்களாக இருந்து அவர்களைக் காப்பாற்றியவர் நம் முதல்வர். தி.மு.க. அரசு கோரிய நிவாரண நிதியை வழங்காமல் கழக அரசை அவமானப் படுத்துவதாக நினைத்துக் கொண்டு, பேரிடரில் சிக்கித் தவிப்போரின் துயரம் அறியாமல் தமிழ் நாட்டு மக்களை ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அவமானப்படுத்தியுள்ளார் என தமிழ்நாடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**இதுகுறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்த அறிக்கை வருமாறு :–**

டிசம்பர் 4ஆம் தேதின்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களிலும், டிசம்பர் 17, 18 ஆகிய தேதிகளில் நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் பெய்த மழை, அதனால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளை அனைவரும் அறிவீர்கள்.

தமிழ்நாடு அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் தான் பேராபத்து தவிர்க்கப் பட்டது. புயல் மழைக்குப் பிந்தைய நிவாரண நடவடிக்கைகள் காரணமாக ஒவ்வொரு பகுதியும் படிப்படியாக மீண்டு வருகிறது. நிவாரணத் தொகை அறிவிக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கி வருகிறோம். தூத்துக்குடி மாவட்டத்தில் இன்னும் சில இடங்களில் மக்களைக் காக்கும், மீட்கும் பணி தொடர்ந்து கொண்டு வருகிறது.



இது குறித்து நான் அதிகம் விவரிக்கத் தேவையில்லை. வெள்ளம் பாதித்த பகுதி மக்கள் மட்டுமல்ல, ஊடகங்களின் வாயிலாக கடந்த மூன்று வார காலமாக நாட்டு மக்கள் இந்தச் செய்திகளைத்தான் அதிகம் அறிந்து வருகிறார்கள். ஊடகங்களும் மக்கள் பாதிக்கப்பட்டு வரும் செய்திகளுக்குத்தான் அதிக முக்கியத்துவம் அளித்து காட்சிகளை வெளியிட்டு வருகிறார்கள்.

**எரிச்சல் மொழியில் ஒன்றிய நிதியமைச்சரின் பதில்!**

நாட்டு மக்கள் அனைவரும் அறிந்த இந்த பாதிப்புச் செய்தி, இந்தியாவில் ஒரே ஒருவருக்கு மட்டும் தெரியவில்லை. அவர்தான் இந்தியாவின் நிதி அமைச்சராக இருக்கிற நிர்மலா சீதாராமன் அவர்கள்.

ஏதோ எதிரி நாட்டின் மீது போர் தொடுக்கும் எரிச்சல் மொழியில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அளித்துள்ள பதில் தமிழ்நாட்டு மக்களை ஒட்டுமொத்தமாக அவமானப்படுத்துவது ஆகும்.

மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை பிரதமர் நரேந்திர மோடி அவர்களைச் சந்தித்து கடந்த 19ஆம் தேதி அன்று விளக்கினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 20 நிமிடங்கள் முதலமைச்சர் அவர்கள் சொன்னது அனைத்தையும் கேட்டுக் கொண்ட பிரதமர் அவர்கள், ‘இது தொடர்பான கோரிக்கை மனு கொண்டு வந்துள்ளீர்களா?’ என்று கேட்டார்கள். ஆம் என்றதும் அதனை வாங்கி வைத்துக் கொண்டார்கள். ‘உங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருகிறேன். இதை விட எனக்கு வேறு பணி இல்லை’ என்று பிரதமர் அவர்கள் சொன்னார்கள்.

தமிழ்நாட்டில் டிசம்பர் 4, 17, 18 ஆகிய மூன்று நாட்கள் பெய்த மழை என்பது வரலாறு காணாதது ஆகும். 50 ஆண்டுகள் கழித்து பெய்கிறது, 100 ஆண்டுகள் கழித்து பெய்கிறது என்று சொல்லத் தக்க மழையளவு ஆகும். எனவே தான் அது ஏற்படுத்திய பாதிப்பு என்பது மிகமிக அதிகமானது.

இதனை தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள்.

> **சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தற்காலிக நிவாரணத்தொகையாக 7,033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத்தொகையாக 12,659 கோடி ரூபாயும் முதலமைச்சர் அவர்கள் கோரி உள்ளார்கள். திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்டபாதிப்புகள் இன்னும் முழுமையாக அளவிடப்படவில்லை. எனவே, அவசர நிவாரண நிதியாக 2 ஆயிரம் கோடி தரவேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் கோரியுள்ளார்கள். ஆக மொத்தம் 21 ஆயிரத்து 692 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசால் ஒன்றிய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.**

**கடும் பேரிடராக அறிவிக்க முதல்வர் வைத்த கோரிக்கை!**

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தற்காலிக நிவாரணத்தொகையாக 7,033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத்தொகையாக 12,659 கோடி ரூபாயும் முதலமைச்சர் அவர்கள் கோரி உள்ளார்கள்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் இன்னும் முழுமையாக அளவிடப் படவில்லை.

எனவே, அவசர நிவாரண நிதியாக 2 ஆயிரம் கோடி தரவேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் கோரியுள்ளார்கள். ஆக மொத்தம் 21 ஆயிரத்து 692 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசால் ஒன்றிய அரசிடம் கேட்கப் பட்டுள்ளது.

அதாவது ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு அரசு வைத்துள்ள கோரிக்கை என்பது கடும் பேரிடராக (Calamity of severe nature) அறிவிக்க வேண்டும் என்பதும், 21 ஆயிரம் கோடியை நிவாரணமாகத் தர வேண்டும் என்பதும் ஆகும். இந்த இரண்டும் கிடையாது என்பதைத் தான் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவருக்குத் தெரிந்த ஆணவ மொழியில் சொல்லி இருக்கிறார்.

தி.மு.க. அரசையும், முதலமைச்சர் அவர்களையும் அவமானப்படுத்துவதாக நினைத்து, தமிழ்நாட்டு மக்களை அவமானப்படுத்தி இருக்கிறார் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.12.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தேர்தலில் வெற்றி பெற்ற புதிய நிர்வாகிகள் தலைவர் ஜி. மோகனகிருஷ்ணன், துணைத் தலைவர் எஸ். அறிவழகன், செயலாளர் கிருஷ்ணகுமார், பொருளாளர் ஜி. ராஜேஷ், நூலகர் வி.எம். ரகு, செயற்குழு உறுப்பினர் ஏ. ரமேஷ், உறுப்பினர்கள் ஏ. இந்தியன், கே.சுப்பிரமணியன், வி.இ. அனிஷ்குமார், திருமதி வி. கயல்விழி, ஜி. முத்துகுமரன், எம்.வி. சதீஷ்குமார், ஏ.எம். நடராஜ் ஆகியோர் சந்தித்து, வாழ்த்துப் பெற்று, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (23.12.2023) தலைமைச் செயலகத்தில், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி மற்றும் அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அமைச்சர் பெருமக்கள் அவர்களின் ஒரு மாத ஊதியமான 35 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய், திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத ஊதியமான 91 இலட்சத்து 34 ஆயிரத்து 500 ரூபாய், என மொத்தம் 1 கோடியே 27 இலட்சத்து 4 ஆயிரத்து 500 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

### ஒன்றிய அரசின் தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து நிதி தந்தது போல அடித்துப் பேசுவதா?

# தமிழ்நாடு மக்கள் மீது கொஞ்சமாவது அக்கறை வைத்து நிதியைத் தாருங்கள்!

## ஒன்றிய நிதி அமைச்சருக்கு - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, டிச. 24-

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவொன்றில், "ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் மாநில பேரிடர் நிவாரண நிதியைத் தந்து விட்டு, ஏதோ ஒன்றிய அரசின் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தந்தது போல, ஒன்றிய நிதி அமைச்சர் அடித்துப் பேசுவதா?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.**

**மேலும் அவர் தமது பதிவில், 'தமிழ்நாடு மக்கள் மீது கொஞ்சமாவது அக்கறை வைத்து நிதியைத் தாருங்கள்!' என்று கேட்டுக் கொண்டுள்ளார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

யாரிடம் எப்படிப் பேச வேண்டும் என்று தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு நன்றாகவே சொல்லிக் கொடுத்துள்ளார்கள்.

சிலரிடம் அண்ணாவைப் போல சிலரிடம் கலைஞரைப் போல - சிலரிடம் கழகத்தலைவரைப் போல பேசுகிறோம். எனினும், குறிப்பிட்ட சிலரிடம், பெரியார் வழியில்தான் பேசியாக வேண்டியிருக்கிறது.

வெள்ள பாதிப்புக்காக கழக அரசு நிவாரண நிதி கேட்டால், "நாங்கள் என்ன ஏ.டி.எம்.ஆ?" என ஒன்றிய அமைச்சர் ஒருவர் கூறியதாக செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு, 'அவர் அப்பா வீட்டுப் பணத்தைக் கேட்கவில்லை. தமிழ்நாட்டு மக்கள் அளித்த வரிப்பணத்தைத்தானே கேட்கிறோம்" என்று கூறினேன்.

என் பேச்சில் மரியாதை சற்று குறைவாக இருந்ததாக அப்போது சிலர் வருத்தப்பட்டார்கள். அடுத்த நாளே, "மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களுடைய அப்பா வீட்டுப் பணத்தைக் கேட்கவில்லை" என்று அவர்கள் கோரிய படியே மிகுந்த 'மரியாதையுடன்' கேட்டுக்கொண்டேன்.

ஆனாலும், மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள், 'பாஷை' குறித்து இன்று பாடமெடுத்துள்ளார்கள்.

மீண்டும் சொல்கிறேன்; மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களின் 'மரியாதைக்குரிய' அப்பா வீட்டுப் பணத்தை நாம் கேட்கவில்லை. தமிழ்நாட்டு மக்கள் செலுத்திய வரிப்பணத்தில் இருந்து தமிழ்நாடு அரசு கோரிய பேரிடர் நிவாரண நிதியைத்தான் கேட்கிறோம்.

வழக்கமாக ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் மாநில பேரிடர் நிவாரண நிதியைத் தந்து விட்டு, ஏதோ ஒன்றிய அரசின் தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தந்தது போல அடித்துப் பேச வேண்டாம்.

நாங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் 'மரியாதை' தருவதற்குத் தயாராகவே இருக்கிறோம் - தமிழ்நாட்டு மக்கள் மீது கொஞ்சமாவது 'அக்கறை' வைத்து நிதியைத் தாருங்கள் மரியாதைக்குரிய மாண்புமிகு ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களே!

இவ்வாறு, அப்பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பில் சென்னை – காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 1,827 நகர்ப்புர மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 23,472 மகளிர்களுக்கு ரூ.125.50 கோடி மதிப்பிலான வங்கி கடன் இணைப்பை வழங்கினார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.12.2023) தலைமைச் செயலகத்தில், இந்து தமிழ் திசைப் பதிப்பகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களைப் பற்றிய தொகுப்பு நூலான "என்றும் தமிழர் தலைவர்" என்ற நூலை வெளியிட்டார். உடன் இந்து தமிழ் திசைப் பதிப்பகத்தின் உதவி ஆசிரியர் ஆதி வள்ளியப்பன், தலைமைச் செயல் அலுவலர் சங்கர் சுப்பிரமணியன், தலைமை உதவி ஆசிரியர் திருமதி சுசித்ரா மகேஸ்வரன், மேலாளர் இன்பராஜ் ஆகியோர் உள்ளனர்.

### எண்ணூர் பகுதியில் எண்ணெய்க் கசிவினால் பாதிக்கப்பட்ட

# 9 ஆயிரம் குடும்பங்களுக்கு ரூ.8.68 கோடி நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, டிச. 24-

**"மிக்ஜாம்" புயலின் போது பெய்த கனமழை காரணமாக எண்ணூர் முகத்துவாரப்பகுதியில், சென்னை பெட்ரோ கெமிக்கல் நிறுவன வளாகத்திலிருந்து வெள்ள நீரோடு கலந்து வெளிவந்த எண்ணெய் கசிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 8 கோடியே 68 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

கொசஸ்தலை ஆற்றில் எண்ணூர் முகத்துவாரப் பகுதியில் கடந்த 05.12.2023 அன்று ஏற்பட்ட எண்ணெய்க் கசிவினை அகற்றிட தமிழ்நாடு அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நிகழ்வில் காட்டுக்குப்பம். சிவன்படைகுப்பம். எண்ணூர் குப்பம் முகத்துவாரகுப்பம். தாழங்குப்பம். நெட்டுக்குப்பம். வ.உ.சி நகர். உலகநாதபுரம் மற்றும் சத்திய வாணி முத்து நகர் ஆகிய கடலோர மீனவக் கிராமங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகுகள் மற்றும் மீன்பிடிவலைகளில் எண்ணெய் படிந்து சேதம் ஏற்பட்டது.

மேலும் இக்கிராமங்களைச் சார்ந்த மீனவர்கள் எண்ணெய்க் கசிவினால் மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல இயலாததால் அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டது. இதைக்கருத்தில் கொண்டு, முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்களால் "வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டு, அத்தொகையும் ஏற்கனவே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**மீனவர்களின் வங்கிக் கணக்கில் வரவு!**

இதனைத் தொடர்ந்து கூடுதலாக, எண்ணெய்க் கசிவினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மேற்கண்ட மீனவக் கிராமங்களைச் சார்ந்த 2,301 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக தலா ரூ.12,500 வீதமும் - மேலும் எண்ணெய்க் கசிவினால் பாதிக்கப்பட்ட 787 மீன்பிடிப் படகுகளைச் சரிசெய்திட படகு ஒன்றுக்கு தலா ரூ.10,000 வீதமும் - மொத்தம் 3 கோடி ரூபாய் அரசினால் ஒப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்நிவாரணத் தொகை, பாதிக்கப்பட்ட மீனவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

மேலும் சென்னை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 4, 6, மற்றும் 7 ஆகிய பகுதிகளில் எண்ணெய்க் கசிவினால் பாதிக்கப்பட்ட 6,700 குடும்பங்களுக்கு தலா ரூ.7,500 வீதம் மொத்தம் 5 கோடியே 2 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்நிவாரணத் தொகை, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். எனவே, மிக்ஜாம் புயல் கனமழையினால் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவினால் பாதிக்கப்பட்ட 9,001 குடும்பங்களுக்கு 8 கோடியே 68 இலட்சம் ரூபாய் வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# #OurTax_OurRights.. பேரிடர் நிவாரணமாக ஒன்றிய அரசிடம் கூடுதல் நிதி கோரும் தமிழ்நாடு!

## பதிவில் ட்ரெண்டிங்!

டெல்லி, டிச. 24-

எங்கள் வரிப் பணம் எங்கள் உரிமை என ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு மக்கள் கேள்வி கேட்டு வருகிறார்கள். மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மீள்வதற்குள் அடுத்த ஒரு வாரத்திலேயே திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் வரலாறு காணாத கனமழை கொட்டித் தீர்த்தது.ஒரே ஆண்டில் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில் பெய்ததால் மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனிடையே மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6000 நிவாரண நிதி வழங்கப்பட்டு வரும் நிலையில், தூத்துக்குடி, நெல்லையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் ரூ.6000 வழங்கப்படும் என்றும் குமரி, தென்காசி மாவட்ட மக்களுக்கு ரூ.1000 வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் செய்தியாளர் கேள்விக்கு பதில் அளித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழ்நாட்டிற்குக் கூடுதல் நிதி வழங்கப்படவில்லை. தற்போது ஒன்றிய அரசு அளித்த ரூ.450 கோடி, மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு வழக்கமாக வழங்க வேண்டிய 2வது தவணையே தவிர, கூடுதல் நிதி அல்ல. தமிழ்நாடு அரசின் நிதியை செலவிட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது,"இவ்வாறு விளக்கம் அளித்தார்.




ஒரு இயற்கைப் பேரிடரின் தாக்கம் மிகக் கடுமையாக இருக்கும்போது இந்த SDRF நிதி போதவில்லை என்றால், அந்த இயற்கைப் பேரிடரைக் கடும் இயற்கை பேரிடராக அறிவித்து தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (NDRF) கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

ஆனால் இதுவரை இரண்டு பேரிடர்களும் கடும் பேரிடர்களாக அறிவிக்கப்படவில்லை. NDRF-ல் இருந்தும் தமிழ்நாட்டிற்கு கூடுதல் நிதி எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்த நிலையில், ஒன்றிய அரசின் NDRFல் இருந்து கூடுதல் நிதி ஒதுக்கீட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் பலமுறை கோரிக்கை வைத்தும் நிதியளிக்காத ஒன்றிய பாஜக அரசை கண்டித்து தமிழ்நாட்டு மக்கள் #OurTax_OurRights என்ற ஹேஷ்டேக்கில் மோடி அரசுக்கு எதிராக தங்களது கண்டனத்தை x பதிவு - சமூகவலைதளத்தில் செய்து வருகின்றனர்.




தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் பெருவிழா நேற்று முன்தினம் (22.12.2023) மாலை பெரம்பூர் தொன்போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழாவிற்கு தலைமையேற்று நல உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ., அணிச் செயலாளர் சுபேர்கான், பிரதம பேராயர் ஏ.ஜே.டேவிட் ஓனேசிமு, தென்னிந்திய திருச்சபை பேராயர் திருச்சி சந்திரசேகர், நீதியரசர் என்.பாஷா, பெந்தகோஸ்தே சபைகளின் தேசிய பேராயர் கே.பி.எடிசன், பாதர் ஜெயபாலன், பாதர் அந்தோணி ராபின்சன், அமலமரி புதல்வியர் சபை அருள்சீலி, சிவஞான பாலய சுவாமிகள், ஜெயந்திலால் செலாணி ஆகியோர் பங்கேற்றனர். பேராயர் து.ரேவதி கிருபாகரன், பிலிப் நெல்சன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

# மதவாதம் இந்த மண்ணில் எப்போதும் வெல்ல முடியாது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அந்த வகுப்புவாத சக்திகளுக்குப் பிடிக்கவில்லை. நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் எல்லாப் பிரிவு மக்களும் அமைதியாக நல்லிணக்கத்தோடு வாழ்கிறார்கள். இதை தடுக்க ஒரு கூட்டம் தவியாய்த் தவிக்கிறது.

ஆனால் உண்மை என்னவென்றால் இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் அந்த கூட்டத்தால் இந்த மண்ணில் நிச்சயமாக வெற்றி பெற முடியாது. ஒரு மனிதன் தன் மேலும் அன்பு செலுத்த வேண்டும், பிற உயிர்கள் மேலும் அன்பு செலுத்த வேண்டும் என்பதுதான் எல்லா மதங்களும் சொல்லுவது. இயேசு கிறிஸ்துவின் போதனைகளும் அப்படித்தான் போதிக்கின்றது. "உன் மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்றுதான் இயேசு கிறிஸ்து சொல்கிறார். சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை, இரக்கம் நீதி, தியாகம், பகிர்தல் என்று இயேசு கிறிஸ்து இந்த மனித குலத்துக்குக் கற்றுத்தந்த மதிப்பீடுகளை வரிசைப்படுத்த முடியும். மனிதர்கள் அனைவரும் சமம் என்பதுதான் சமத்துவம். யாரையும் வேற்றுமையாக பார்க்காதே என்பதுதான் சகோதரத்துவம். அனைவருடனும் சேர்ந்து வாழ் என்பதுதான் ஒற்றுமை. ஏழைகள் மீது கருணை காட்டு என்பதுதான் இரக்கம். அநீதிக்கு எதிராகக் குரல் கொடு என்பதுதான் நீதி. மற்றவர்களுக்காக வாதாடு என்பதுதான் தியாகம். உன்னிடம் இருப்பதை இல்லாதவருக்குக் கொடு என்பதுதான் பகிர்தல். இதையெல்லாம்தான் கிறிஸ்தவம் சொல்கிறது. இந்த உன்னதமான குணங்கள் ஒவ்வொரு மனிதருக்கும் இருந்தால் அதுதான் சமத்துவ நாடாக அமையும்.

இங்கே சிலர் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அண்மையில் சென்னையிலும் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் வெள்ளம் வந்தபோது மக்கள் எல்லோருக்கும் அரசின் சார்பில் நிவாரண பொருட்களை வழங்கினோம். உண்மையான அக்கறையோடு செய்தோம். அமைச்சர்களில் இருந்து அதிகாரிகள் வரைக்கும் மக்களோடு மக்களாக களத்திலேயே இருந்து செயல்பட்டார்கள். அதிலும் இங்கே இருக்கக்கூடிய நம்முடைய சேகர்பாபு அவர்கள் 24 மணி நேரமும் மக்களோடே இருந்தார். இதே மாதிரிதான் திமுக தொண்டர்கள், நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள் எல்லோரும் இரவு பகல் பார்க்காமல் உழைத்தார்கள். சமூக சேவை அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், தன்னார்வத் தொண்டர்கள் என்று எல்லாரும் மக்களுக்காக உழைத்தார்கள். மழை வெள்ள பாதிப்பு ஏற்பட்டதும் குடும்ப அட்டைதாரர்களுக்கு 6000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தோம். அறிவித்து இரண்டு வாரத்துக்குள் கொடுத்த ஆட்சிதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி. நான் வரும் போது தொலைபேசியில் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு, "சென்னை, சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு அறிவித்தோமே, எந்த அளவுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று கேட்டேன். 98% கொடுத்துவிட்டதாகச் சொன்னார்கள். மீண்டும் 5 லட்சம் பேர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களது கோரிக்கையும் விரைவில் பரிசீலிக்கப்பட்டு உரிய வகையில் பரிசீலிக்கப்பட்டு வழங்கப்படும்.

வந்தது. பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கும் அந்த மக்கள் எங்களை இன்முகத்தோடு வரவேற்றார்கள் அதையெல்லாம் பார்த்த போது நான் பூரித்துப் போனேன்.

ஆனால் இன்று அர்த்தம் இல்லாத குறைகளைச் சொல்கிறார்கள் நூற்றாண்டு காணாத மழை பெய்யும்போது இது மாதிரியான பேரிடர் ஏற்படும் நேரத்தில் அரசுக்கு உதவியாக – எந்தக் கட்சியாக இருந்தாலும் அது எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வாக இருந்தாலும் அரசுக்கு துணை நின்றிருக்க வேண்டும்.

### மலிவான அரசியல் செய்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி!

ஒன்றிய அரசிடம் இருந்து நிதி வரட்டும் என்று காத்திருக்காமல் ஒன்றிய அரசு இன்னும் நிதி தரவில்லை என்று காரணம் சொல்லாமல் உடனடியாக கொடுத்தோம். இதற்கு இடையில் தென்மாவட்டங்களிலும் மழை வெள்ளம் வந்தது. அந்த மக்களுக்கும் இழப்பீடு அறிவித்திருக்கிறேன். அவர்களுக்கும் விரைவில் கொடுக்கப் போகிறோம்.

அந்த மக்களை போய் நான் பார்த்தபோது அரசு இயந்திரம் உடனடியாகச் செயல்பட்டு எங்களைக் காப்பாற்றி விட்டது என்று சொன்னார்கள். அவர்களின் முகங்களில் மகிழ்ச்சியைப் பார்த்தபோதுதான் எனக்குக் கொஞ்சம் நிம்மதி

அரசுடன் இருந்து மக்களுக்குப் பணியாற்றி இருக்க வேண்டும். அப்படி யாராவது வந்தார்களா என்றால் இல்லை. கொரோனா காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த போதும் அவர்கள் இல்லை. எதிர்க்கட்சியாக

இருந்த தி.மு.க.தான் முன்னின்று ஒன்றிணைவோம் வா என்ற திட்டத்தை அறிவித்து செயலாற்றியது. அதை நீங்கள் எல்லாம் மறந்திருக்க மாட்டீர்கள்.

#### சிறுபான்மையினர் மீது பழனிசாமிக்கு திடீர் பாசம் ஏன்?

இந்த மாதிரி நேரத்திலும் மலிவான அரசியல் செய்ய முன்னால் வந்து விடுகிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி. சில நாட்களுக்கு முன் நடந்த ஒரு விழாவில் பேசிய பழனிசாமி அவர்கள் சிறுபான்மை மக்களின் பாதுகாவலன் அ.தி.மு.க.தான் என்று பேசி இருக்கிறார். சிறுபான்மை மக்கள் மேல் அவருக்கு திடீர் என்று பாசம் பொங்குகிறது.

குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்புரிமை ரத்து, முத்தலாக் என்று எல்லா சட்டங்களையும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்தவர் பழனிச்சாமி. கூட்டணி தர்மத்திற்காக ஆதரிக்க வேண்டியதாக இருந்தது என்று சப்பைக்கட்டு கட்டினார்.

இப்போதுதான் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று ஒரு கபட நாடகம் போட்டுக்கொண்டு இருக்கிறாரே! பா.ஜ.க.வை எதிர்த்து ஒரு வார்த்தையாவது பேசியிருக்கிறாரா? இல்லையே!

#### வருகிற தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணிதான் ஆட்சி அமைக்கும்!

இவரின் நாடகத்தை எல்லாம் பார்த்து மக்கள் யாரும் ஏமாற மாட்டார்கள். இந்தியா கூட்டணிதான் அடுத்த ஆண்டில் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய அளவில் ஆட்சியை அமைக்கும் இந்தியா கூட்டணியின் ஆட்சி அமைய நாம் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். அதற்கு நீங்கள் ஆதரவு தர வேண்டும் என்று கேட்டு மீண்டும் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# தேசியப் பேரிடராக அறிவித்து - தமிழ்நாடு முதலமைச்சர் கோரிய நிவாரண நிதியை உடனே விடுவிக்க வேண்டும்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை... முதல் பக்கத் தொடர்ச்சி!

பாதிப்பையும், பாதிக்கப்பட்ட மக்களையும், அவர்கள் அடைந்த துயரங்களையும், அனுபவிக்க இருக்கும் துன்பங்களையும் கவனத்தில் கொள்ளாமல் ‘தேசியப் பேரிடராக அறிவிக்க முடியாது, அப்படி இதுவரை அறிவித்தது இல்லை’ என்று சொல்வதன் மூலமாக தனது இரக்கமற்ற குணத்தைத் தான் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளிப்படுத்தி இருக்கிறார்.

#### தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என இரக்கமற்ற குணத்துடன் பேசும் நிதியமைச்சர்!

மக்கள் துன்ப துயரங்களை அடைந்து வரும் நேரத்தில் அவர்களைக் கேலி செய்வதைப் போல இருக்கிறது அவர் அளித்திருக்கும் பேட்டி.

ஒன்றிய அரசின் அமைப்புகளின் சார்பில் என்னென்ன மீட்புப்பணிகள் நடந்துள்ளது என்பதை எல்லாம் நிதி அமைச்சர் தனது பேட்டியில் சொல்லி இருக்கிறார். இது எதுவும் புதிய செய்தி அல்ல. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்றைய தினம் நெல்லையில் வைத்து அளித்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் சொன்னவை தான். மத்திய பாதுகாப்புப் படையும் இராணுவமும் எந்த வகையில் ஒத்துழைத்து மீட்புப் பணியைச் செய்துள்ளது என்பதை முதலமைச்சர் அவர்களே விளக்கிச் சொல்லி விட்டார். மத்திய பாதுகாப்புப் படை ஒத்துழைக்கவில்லை என்றோ, இராணுவம் வரவில்லை என்றோ நாங்கள் குற்றச்சாட்டை வைக்கவுமில்லை. நிதி அமைச்சர் சொன்னது புதிய செய்தியும் அல்ல. தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்புகளை வரிசையாகப் பார்த்தாலே மத்திய பாதுகாப்புப் படை குறித்த செய்திகள் அதிகம் உள்ளன.

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேட்டி அளிக்க இருக்கிறார் என்று கேள்விப்பட்டதும், தமிழ்நாட்டுக்கான நிதியை அறிவிக்கவே அவர் பேட்டிக்கு ஏற்பாடு செய்திருப்பதாக நான் முதலில் நினைத்தேன். ‘நிதி கிடையாது’ என்று சொல்வதற்காக எதற்காக பேட்டி தர வேண்டும்?

#### தமிழ்நாடு அரசின்மீது பொய்யும் வன்மமும் கலந்த குற்றச்சாட்டு!

பொய்யும் வன்மமும் கலந்த குற்றச்சாட்டுகளை வைப்பதன் மூலமாக தமிழ்நாடு அரசின் மீது தவறான கற்பிதத்தை உருவாக்க மீடியாக்களை நிர்மலா சீதாராமன் பயன்படுத்தி இருக்கிறார்.

தமிழ்நாடு அரசு கேட்டது 21 ஆயிரம் கோடி. ஆனால் அதில் இதுவரை வந்திருப்பது 450 கோடி மட்டுமே. இதுவும் தமிழ்நாடு அரசுக்கு வழக்கமாக வழங்கப்பட வேண்டிய நிதி தானே தவிர, இப்போது ஏற்பட்ட புயல் மழை வெள்ளச் சேதங்களில் இருந்து மீட்க தரப்பட்ட சிறப்பு நிதி அல்ல.

இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் செலவுகளைச் சமாளிப்பதற்காக ஒவ்வொரு மாநிலத்திற்கும் மாநில பேரிடர் நிவாரண நிதி (SDRF) என்ற நிதி உள்ளது. எந்தெந்த மாநிலத்திற்கு இந்த நிதி எவ்வளவு என்பதை ஐந்தாண்டு காலத்திற்கு ஒருமுறை ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் நிதிக் குழு (Finance Commission) தீர்மானிக்கிறது. இதன்படி, தமிழ்நாட்டினுடைய SDRFக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி 1,200 கோடி ரூபாய் ஆகும். இதில் 75 விழுக்காட்டை, அதாவது 900 கோடி ரூபாயை ஒன்றிய அரசு தரவேண்டும். 25 விழுக்காட்டை, அதாவது 300 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஏற்றிடவேண்டும்.

#### வெள்ள பாதிப்புக்கு ஏற்றளவு கூடுதல் நிதி ஒதுக்கவில்லை!

ஒன்றிய அரசின் பங்கானது ஆண்டுதோறும் இரு தவணைகளில் நமக்கு அளிக்கப்படுகின்றது. அதாவது இரண்டு தடவை தலா 450 கோடி ரூபாய் நமக்கு அளிக்கப்படும். ஒரு இயற்கைப் பேரிடரின் தாக்கம் மிகக் கடுமையாக இருக்கும்போது இந்த SDRF நிதி போதவில்லை என்றால், அந்த இயற்கைப் பேரிடரைக் கடும் இயற்கைப் பேரிடராக அறிவித்து தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து (NDRF) கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

சென்னையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தையும், தற்போது தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத வெள்ளத்தையும், இவ்வாறு கடும் பேரிடர்களாக அறிவித்து NDRFல் இருந்து கூடுதல் நிதி ஒதுக்கிட வேண்டும் என்றுதான் நாங்கள் பலமுறை கோரிக்கை வைத்துள்ளோம். ஆனால் NDRFஇல் இருந்து இதுவரை நமக்கு கூடுதல் நிதி எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

ஒன்றிய அரசிடமிருந்து நமக்கு வந்த 450 கோடி ரூபாய் நிதி என்பது இந்த ஆண்டு நமது SDRFக்கு ஒன்றிய அரசு அளிக்க வேண்டிய இரண்டாவது தவணை தானே தவிர, கூடுதல் நிதி அல்ல. தமிழ்நாட்டு மக்களை ஒன்றிய பாஜக அரசு எத்தகைய அலட்சியத்தோடு நடத்துகிறது என்பதற்கு உண்மையான எடுத்துக்காட்டு இது.

> ‘மழை பெய்யும் போது முதலமைச்சர் எங்கே இருந்தார்?’ என்று கேட்கிறார் நிர்மலா சீதாராமன். ‘இந்தியா’ கூட்டணி கூட்டத்துக்குச் சென்றிருந்ததைச் சுட்டிக் காட்டுகிறார். ‘இந்தியா’ என்றாலே இவர்களுக்கு எரிச்சலாக இருக்கிறது. அதனைத்தான் நிர்மலா சீதாராமன் வெளிப்படுத்தி இருக்கிறார். பிரதமரைச் சந்திப்பதற்காகவும் சேர்த்தேதான் முதலமைச்சர் அவர்களின் டெல்லிப் பயணம் திட்டமிடப்பட்டது. பற்றி எரிந்த மணிப்பூருக்கு ஒன்றிய மாண்புமிகுக்கள் ஒரு தடவையாவது போனார்களா? மயிலாப்பூருக்கு வந்து காய்கறி வாங்கி போட்டோ எடுத்துக் கொண்ட நிதி அமைச்சர் அவர்கள், 4ஆம் தேதி புயல் வெள்ளப் பாதிப்புகளைப் பார்க்க ஒரு முறையாவது சென்னை வந்தாரா? என்று எங்களாலும் கேட்க முடியும். டெல்லி சென்ற ஒரே ஒரு நாள் தவிர அனைத்து நாட்களும் மக்களோடு மக்களாகத்தான் இருந்தார் முதலமைச்சர் அவர்கள். இதை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அறிவார்கள்.

#### பா.ஜ.க.வின் வாக்கு சதவிகிதத்திற்கு ஏற்றவாறு தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கீடா?

2015ஆம் ஆண்டு முதல் பேரிடர்களினால் ஏற்பட்ட சேதங்களை தற்காலிகமாக மற்றும் நிரந்தரமாக சீரமைக்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிய மொத்தத் தொகை என்பது ரூ.1,27,655.80 கோடி ஆகும். இதில் ஒன்றிய பா.ஜ.க. அரசால் ரூ.5884.49 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிய தொகையில் 4.61 விழுக்காடு மட்டுமே ஆகும். அதாவது பா.ஜ.க. தமிழ்நாட்டில் வைத்திருக்கும் வாக்கு சதவிகிதத்திற்கு அதற்கு ஏற்ப நிதி ஒதுக்குவார்கள் போலும். தமிழ்நாடு குறித்தும், வாழும் மக்கள் குறித்தும் துளியும் அக்கறையற்றதாக ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்பட்டு வருகிறது. இதனை மறைப்பதற்காக நிருபர்கள் மீது பாய்ந்துள்ளார் நிதி அமைச்சர். அவரது கோபத்துக்குப் பின்னால் இருக்கும் குதர்க்கம் அனைவரும் அறிந்ததுதான்.

நிதி அமைச்சர் தனது பேட்டியில், பிரதமர் முதலமைச்சரது சந்திப்பையும் கொச்சைப்படுத்தி இருக்கிறார். ‘ஒரு நாள் முழுக்க டெல்லியில் இருந்த முதலமைச்சர், போகிற போக்கில் சந்தித்துக் கொள்ளலாம் என்ற தோரணையில் பிரதமர் மோடியை இரவில் சந்தித்தார்’ என்று சொல்லி இருக்கிறார் நிர்மலா சீதாராமன். இந்தியப் பிரதமர் தன்னைச் சந்திக்க வருபவர்களுக்கான நேரத்தை அவர் தான் தீர்மானிப்பார் என்பதைக் கூட தெரியாதவராக ஒருவர் நிதி அமைச்சராக இருப்பது வேதனை தருகிறது. மதியம் 12.30 மணிக்கு வரலாம் என்று நேரம் ஒதுக்கியது பிரதமர் அலுவலகம். அதன்பிறகு இரவு 10.30 மணிக்கு வரலாம் என்று நேரத்தை மாற்றியது பிரதமர் அலுவலகம். எனவே இரவில் சந்திக்க நேரம் ஒதுக்கியது பிரதமர் அலுவலகம் தானே தவிர, முதலமைச்சர் அல்ல. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் யாரிடமும், எந்த சூழலிலும் தோரணை காட்டக் கூடியவர் அல்ல.

#### ஒரே நாடு, ஒரே தேசம் என்றால் தமிழ்நாட்டில் கடும் பேரிடர் என அறிவியுங்கள்!

‘மழை பெய்யும் போது முதலமைச்சர் எங்கே இருந்தார்?’ என்று கேட்கிறார் நிர்மலா சீதாராமன். ‘இந்தியா’ கூட்டணி கூட்டத்துக்குச் சென்றிருந்ததைச் சுட்டிக் காட்டுகிறார். ‘இந்தியா’ என்றாலே இவர்களுக்கு எரிச்சலாக இருக்கிறது. அதனைத் தான் நிர்மலா சீதாராமன் வெளிப்படுத்தி இருக்கிறார். பிரதமரைச் சந்திப்பதற்காகவும் சேர்த்தே தான் முதலமைச்சர் அவர்களின் டெல்லி பயணம் திட்டமிடப்பட்டது. பற்றி எரிந்த மணிப்பூருக்கு ஒன்றிய மாண்புமிகுக்கள் ஒரு தடவையாவது போனார்களா? மயிலாப்பூருக்கு வந்து காய்கறி வாங்கி போட்டோ எடுத்துக் கொண்ட நிதி அமைச்சர் அவர்கள், 4ஆம் தேதி புயல் வெள்ளப் பாதிப்புகளைப் பார்க்கவாவது ஒரு முறை சென்னை வந்தாரா? என்று எங்களாலும் கேட்க முடியும். டெல்லி சென்ற ஒரே ஒரு நாள் தவிர அனைத்து நாட்களும் மக்களோடு மக்களாகத்தான் இருந்தார் முதலமைச்சர் அவர்கள். இதை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அறிவார்கள்.

‘ஒரே நாடு ஒரே தேசம்’ என்பதில் உண்மையான அக்கறை இருப்பவராக இருந்தால் தமிழ்நாட்டில் நடந்த பாதிப்புகளை கடும் பேரிடராக அறிவியுங்கள், தமிழ்நாடு அரசு கோரும் நிவாரண நிதியை விடுவியுங்கள் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடி பேரூராட்சி, மு.ரெ. அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 1,541 பயனாளிகளுக்கு தனி நபர் வேலைக்கான அடையாள அட்டைகளை வழங்கினார். அருகில் உதவி இயக்குநர்(பேரூராட்சிகள்) திருமதி ரா.மனோரஞ்சிதம், கன்னிவாடி பேரூராட்சித் தலைவர் திருமதி ச.தனலட்சுமி சண்முகம், துணைத்தலைவர் திருமதி மு.கீதா முருகானந்தம், உதவி செயற்பொறியாளர் திருமதி வீ.வெற்றிச்செல்வி உட்பட பலர் உள்ளனர்.

### திண்டுக்கல் மாவட்டம் -கன்னிவாடி பேரூராட்சியில், தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ்

# 1,541 பயனாளிகளுக்கு தனி நபர் வேலைக்கான அடையாள அட்டைகள்!

## அமைச்சர் இ.பெரியசாமி வழங்கினார்!

திண்டுக்கல், டிச. 24 -

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடி பேரூராட்சி, மு.ரெ. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 1,541 பயனாளிகளுக்கு தனிநபர் வேலைக்கான அடையாள அட்டைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் இ.பெரியசாமி, பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் அரசின் திட்டங்கள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார்கள். தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார்.

மத்திய ஆட்சியில் நாம் பொறுப்பு வகித்த கடந்த ஆட்சி காலத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை இந்தியா முழுவதும் செயல் படுத்த ரூ.90,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு ரூ.60,000 கோடி நிதி தான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் கிராமப்புற பகுதிகளில்தான் செயல்படுத்தப்படுகிறது. தேர்தல் நேரத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் 100 நாள் வேலை பேரூராட்சி பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று சொன்னபடி, தற்போது பேரூராட்சி பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டம் மாநில அரசு நிதியிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. அதன்படி கன்னிவாடி பேரூராட்சியில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டம் 2023-2024ன் கீழ் பணி வாய்ப்பு கோரி 1,900 பேர் பெயர் பதிவு செய்ததில், 1,541 பயனாளிகளுக்கு தனிநபர் வேலைக்கான அடையாள அட்டைகள் இன்றைய விழாவில் வழங்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்னர், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் ரெட்டியார் சத்திரத்தில் ஒரு அரசு கல்லூரி மற்றும் ஆத்தூரில் கூட்டுறவுத் துறை சார்பில் ஒரு கல்லூரி என 2 கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர், பெண்கள் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து, உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. குடும்பத் தலைவிகளின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் அவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் தமிழகத்தில் 1.20 கோடி பெண்கள் பயனடைந்து வருகின்றனர். தகுதியுள்ளவர்கள் விடுபட்டிருந்தால் அவர்களும் இத்திட்டத்தில் பயனடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கிராமப்புற சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயிகள், மகளிருக்காக பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.


தென்மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து 32 லாரிகளில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நிவாரணப் பொருட்கள் அனுப்பும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது, என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் .ப.க.சிவகுருசாமி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) ரா.மனோரஞ்சிதம், கன்னிவாடி பேரூராட்சி தலைவர் ச.தனலட்சுமி சண்முகம், துணைத்தலைவர் மு.கீதா முருகானந்தம், உதவி செயற்பொறியாளர் வீ.வெற்றிச்செல்வி, திண்டுக்கல்(மேற்கு) வட்டாட்சியர் .சோ.செழியன், பேரூராட்சி உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### 50வது நினைவு தினம்: சென்னை அண்ணா சாலையில் உள்ள

# தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு - இன்று கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

### கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் - பொருளாளர் டி.ஆர்.பாலு - முன்னணியினர் பங்கேற்பு!



சென்னை, டிச.24-

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 50வது நினைவு நாளான இன்று (24.12.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா சாலையில் (சிம்சன் அருகில்) அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

**நே.சிற்றரசு**

நாள் : 22-12-2023 செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

### 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி'

# உழவர்களுக்கு கழக அரசு உறுதுணையாக நின்று காக்கும்!

### தேசிய உழவர் நாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, டிச.24-**

**தேசிய உழவர்கள் நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், "உழவர்களுக்கு கழக அரசு உறுதுணையாக நின்று காக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

தேசிய உழவர்கள் நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

"உழுவார் உலகத் தார்க்கு ஆணி" எனும் அளவில் உலகை உய்விக்கும் உயர்குடியாம் உழவர்கள் அனைவருக்கும் தேசிய உழவர்கள் நாள் வாழ்த்துகள்!



பெருமழையால் பயிர்களையும் கால் நடைகளையும் வாழ் வாதாரத்தையும் இழந்துள்ள உழவர்களுக்கு உறுதுணையாக நமது அரசு நின்று காக்கும்.

இவ்வாறு - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில்

# தூத்துக்குடிக்கு நிவாரண உதவி பொருட்கள்!

சிவகங்கை, டிச. 24-

இம்மாதம் 17,18 தேதிகளில் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி, ஆகிய நான்கு மாவட்டங்களில் பெய்த பெரும்மழையினால் கடும் பாதிப்புகள் ஏற்பட்டது. இதில் தூத்துக்குடி மாவட்டத்தில் அதிகம் பாதிப்பு ஏற்பட்டது.

தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், மாநில சுற்றுச்சூழல் அணிஅமைப்பாளர் சேனாதிபதி ஆகியோர் ஆலோசனையின் பேரில்மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் இரண்டரை டன் அரிசி, வேஷ்டி சேலை மற்றும் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அ.வல்லபாய் இந்த நிவாரண பொருட்களை வேனில் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட சுற்றுச்சூழல் அணித் தலைவர் எம்.கார்கண்ணன், துணை அமைப்பாளர்கள் மு.குமரன் , சாய் சுரேஷ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மதுரை ஏ.ஆர்.சந்திரன்**

**டிசம்பர் 24 (2008)**



பள்ளியில் படிக்கின்ற காலத்திலேயே பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் மீது தீவிரப் பற்றுக் கொண்டு கழகப் பணிகளில் ஈடுபட்டவர். கழக மாநாடுகள் அனைத்திலும் பங்கேற்றவர். மதுரை முத்துவுடன் சேர்ந்து கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்.

கழகம் தொடங்கிய காலத்தில் மதுரை வடக்கு மாசி வீதியில் "மறுமலர்ச்சி படிப்பகம்" என்ற படிப்பகத்தைத் தொடங்கி அதில் முரசொலி, நம்நாடு, திராவிட நாடு போன்ற ஏடுகளை வழங்கி கழகத் தோழர்களையெல்லாம் படிக்க வைத்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் வாழ்த்துகளுடன் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக நியமிக்கப்பட்டு தலைவர் கலைஞர் அவர்களிடம் சிறந்த கூட்டுறவு வங்கி என்ற பாராட்டைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

### 'ஒரே தேசம், ஒரே மக்கள்' என குரல் கொடுப்போர் இழிவாக நடக்கலாமா?

# ஒன்றிய அரசின் பாராமுகம் தமிழ்நாட்டை வஞ்சிப்பதாக உள்ளது!

## 'தினகரன்' நாளேடு கண்டனம்!

சென்னை, டிச. 24 -

'ஒரே தேசம், ஒரே மக்கள்' என குரல் கொடுப்போர் இழிவாக நடக்கலாமா? என்றும் வெள்ள நிவாரண நிதி ஒதுக்காத ஒன்றிய அரசின் பாராமுகம் தமிழ்நாட்டை வஞ்சிப்பதாக உள்ளது என 'தினகரன்' நாளேடு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து 23.12.2023 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடந்த 17 மற்றும் 18ம் தேதிகளில் வரலாறு காணாத அளவுக்கு அதி கனமழை கொட்டித்தீர்த்தது. மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. சாலைகள் துண்டிக்கப்பட்டு, பல கிராமங்கள் தீவுகளாக மாறின. வீடுகளுக்குள் முடங்கிய மக்கள், 3 நாட்களாக உணவு, குடிநீர் இன்றி தவித்தனர். நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை பாதிப்புகளை பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், மக்கள் படும் துயரத்தை பார்த்து கண் கலங்கினார். "நெல்லை, தூத்துக்குடியில் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்ப அட்டை தாரர்களுக்கு ரூ. 6 ஆயிரம் நிவாரணமாக வழங்கப்படும். தென்காசி, கன்னியாகுமரியில் பாதிப்புகளின் அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும். கன்னியாகுமரி, தென்காசி மாவட்ட மக்களுக்கு ஆயிரம் வெள்ள நிவாரணமாக வழங்கப்படும்" என்பது உள்ளிட்ட பல அறிவிப்புகளை வெளியிட்டார்.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய 4 மாவட்ட மக்களை மிக்ஜாம் புயல் புரட்டிப்போட்ட வடு காயும்முன் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட மக்களை மழை மூழ்கடித்து விட்டது.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ரேஷன் கார்டு வாரியாக தலா ரூ.6 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 90 சதவீதம் பேருக்கு இந்த நிவாரணம் வழங்கப்பட்டு விட்டது. சென்னையில் மட்டும் 4.90 லட்சம் பேர் இந்த நிவாரணத் தொகை கேட்டு விண்ணப்பித்துள்ளனர். கடுமையான நிதி நெருக்கடிக்கு மத்தியிலும், முதல்வர் மு.க.ஸ்டாலின், தென்மாவட்ட மக்களை கைவிடமாட்டேன் என உறுதி எடுத்து, நிவாரண தொகை விவரத்தை அறிவித்து, விநியோகிக்க உத்தரவிட்டுள்ளார்.



தினகரன்

டிசம்பர் 23, 2023 சனிக்கிழமை

ஏன் இந்த பாராமுகம்?

தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடந்த 17 மற்றும் 18ம் தேதிகளில் வரலாறு காணாத அளவுக்கு அதி கனமழை கொட்டித்தீர்த்தது. மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. சாலைகள் துண்டிக்கப்பட்டு, பல கிராமங்கள் தீவுகளாக மாறின. வீடுகளுக்குள் முடங்கிய மக்கள், 3 நாட்களாக உணவு, குடிநீர் இன்றி தவித்தனர். நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை பாதிப்புகளை பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், மக்கள் படும் துயரத்தை பார்த்து கண் கலங்கினார்.

தலைநகரை சுற்றியுள்ள 4 மாவட்டங்கள், தென் தமிழ்நாட்டில் 4 மாவட்டங்கள் என மொத்தம் 8 மாவட்ட மக்களின் இயல்பு நிலை அடியோடு பாதிக்கப்பட்ட பின்னரும், இந்த துயரத்தை, ஒன்றிய அரசு இது வரை பேரிடராக அறிவிக்கவில்லை. அதற்கான நிதியும் ஒதுக்கவில்லை. மக்களை சமாதானப்படுத்த வேண்டும் என்ற நோக்கில், கண் துடைப்புக்காக ஒன்றிய குழு ஆய்வு செய்து வருகிறது. தேச ஒற்றுமை, ஒருமைப்பாடு பற்றி பேசும் பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் தமிழ்நாடு பாதிப்பு பற்றி துளியும் கண்டுகொள்ளவில்லை. தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள 8 மாவட்ட பாதிப்பு நிலவரம் பற்றி, முதல்வர் மு.க.ஸ்டாலின், புதுடெல்லியில் பிரதமர் மோடியிடம் சுமார் அரை மணி நேரம், நேரில் எடுத்துக்கூறியுள்ளார்.

ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளார். அதன்பிறகும், ஒன்றிய அரசின் நிவாரண நிதி இன்னும் வந்து சேரவில்லை. ஒன்றிய அரசின் பாராமுகம், தமிழ்நாட்டை வஞ்சிப்பதாகவே உள்ளது. இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறுவது, அவர்களுக்கு உறுதுணையாக இருப்பது, ஆட்சியாளர்களுக்கு அழகு. ஆனால், ஒன்றிய அரசின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், ஜென்மபகை கொண்டதுபோல், தமிழ்நாடு மக்களை இழிவுபடுத்தும் வகையில் "இந்த துயரத்தை கடும் பேரிடராக அறிவிக்க இயலாது" என வெளிப்படையாக கூறுகிறார். "ஒரே தேசம், ஒரே மக்கள்" என குரல் கொடுக்கும் அவர், தமிழ்நாடு மக்களை நான்காம் தர குடிமக்கள் போல் பாவிப்பது ஏன்? துயர் துடைக்காவிட்டாலும், ஒட்டுமொத்த தமிழ் மக்களை இழிவுபடுத்தலாமா? வெந்த புண்ணில் வேல் பாய்ச்சலாமா? இதற்கு பழி தீர்க்கும் வகையில், வரும் நாடாளுமன்ற தேர்தலில், ஒட்டுமொத்த தமிழ் மக்களும் வாக்குச்சீட்டை கையில் எடுக்கும் காலம் நெருங்கிவிட்டது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### முன்னாள் எம்.பி., பி.ஆர்.ராமகிருஷ்ணன் மனைவி

# ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆர்.பிரபுவின் தாயார் திருமதி ராஜேஸ்வரி ராமகிருஷ்ணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச. 24-

"கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி" வருமாறு:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் பி.ஆர்.ராமகிருஷ்ணன் அவர்களின் துணைவியாரும் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆர். பிரபு அவர்களின் தாயாருமான திருமதி. ராஜேஸ்வரி ராமகிருஷ்ணன் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

அவரது மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



நெல்லை தூத்துக்குடி மாவட்டங்களில் பெய்த வரலாறு காணாத பெருமழையால், தாமிரபரணி ஆற்றில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதை தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி கரையோரம் உள்ள கீழமங்களக்குறிச்சி கிராமத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்து கடும் வெள்ளப்பெருக்கால், சேதமடைந்த வீடுகள், வாழைத்தோட்டங்கள், பேருந்து நிறுத்தம், குடியிருப்புப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு, பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் அமைச்சர் பி.மூர்த்தி, அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பேரூராட்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, மளிகை பொருட்கள், பாய், போர்வை உள்ளிட்ட நிவாரண உதவிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் அமைச்சர் பி.மூர்த்தி, அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கடந்த 5 ஆண்டுகளில்

# இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர நிலக்கரியின் மதிப்பு எவ்வளவு?

## மக்களவையில் கழக உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, டிச. 24 -

கடந்த ஐந்தாண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட உயர் தர நிலக்கரியின் மொத்த அளவு மற்றும் மதிப்பு (இந்திய ரூபாயில்) குறித்தும் வரும் காலங்களில் இறக்குமதி நிலக்கரியை நம்பியிருப்பதைக் குறைக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உயர்தர நிலக்கரியை போதுமான அளவு வழங்குவதற்கு அரசு தனியார் நிறுவனங்களைச் சார்ந்துள்ளது என்பது உண்மையா? அப்படியானால், அதன் விவரம் கடந்த ஐந்தாண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட உயர் தர நிலக்கரியின் மொத்த அளவு மற்றும் மதிப்பு (இந்திய ரூபாயில்) ஆண்டு வாரியாக வரும் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியை நம்பியிருப்பதைக் குறைக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

பல்வேறு தொழில்துறைகளுக்கான உயர் தர நிலக்கரியின் தேவை மற்றும் விநியோகத்தை பூர்த்தி செய்ய போதுமான நடவடிக்கைகளை எடுப்பதில் கார்பன் வெளியேற்றம் குறைப்பதற்கான அர்ப்பணிப்பின் காரணமாக ஒன்றிய அரசு ஏதேனும் சிக்கலை எதிர்கொள்கிறதா?

அப்படியானால், உயர் தர நிலக்கரியின் மொத்த பற்றாக்குறையின் விவரங்கள் மற்றும் இது தொடர்பாக அரசு எடுத்த தீர்வு நடவடிக்கை என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் நாடாளுமன்ற விவகாரங்கள், நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சர் பிரல்ஹத் ஜோஷி எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உயர்தர நிலக்கரியை போதுமான அளவு வழங்குவதற்கு அரசு தனியார் நிறுவனங்களை சார்ந்திருக்கவில்லை. எனவே, தற்போதைய இறக்குமதிக் கொள்கையின்படி, நிலக்கரி திறந்த பொது உரிமத்தின் (Open General Licence) கீழ் வைக்கப்படுகிறது, மேலும் நுகர்வோர் அவர்கள் விரும்பும் மூலத்திலிருந்து நிலக்கரியை தங்கள் ஒப்பந்த விலையின்படி பொருந்தும் வரியைச் செலுத்தி இறக்குமதி செய்யலாம்.

நிலக்கரி இறக்குமதியைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (பட்டியல் இணைப்பு)

(i) உள்நாட்டில் நிலக்கரி உற்பத்தியை மேம்படுத்துவதில் உந்துதல் உள்ளது, இது தன்னிறைவை அடைவதற்கும் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கும் முக்கியமாகும். 2022-23 ஆம் ஆண்டில், நிலக்கரி உற்பத்தி முந்தைய ஆண்டை விட 14.77% அதிகரித்துள்ளது.

2023 நவம்பர் வரையிலான நடப்பு ஆண்டில், உள்நாட்டு நிலக்கரி உற்பத்தி கடந்த ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடுகையில் 13% அதிகரித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில், 1012.14 மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தி இலக்கு. அதேபோல், 2025-26, நிலக்கரி இந்தியா லிமிடெட் (சிஐஎல்) மட்டும் ஒரு பில்லியன் டன்களை உற்பத்தி செய்யும்.

(ii) உள்நாட்டில் நிலக்கரி உற்பத்தியை அதிகரிக்க எடுக்கப்பட்ட முக்கிய முயற்சிகளில் ஒற்றை சாளர அனுமதி, சுர ங்கங்கள் மற்றும் கனிமங்கள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்கு முறை) சட்டம், 1957 திருத்தம் ஆகியவை அடங்கும் இறுதி பயன்பாட்டு ஆலை, MDO மாதிரி மூலம் உற்பத்தி, மேற்பரப்பு சுரங்கம், தொடர்ச்சியான சுரங்கம் போன்ற நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு அதிகரிப்பு, புதிய திட்டங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள திட்டங்களை விரிவாக்கம், மற்றும் தனியார் நிறுவனங்கள் / பொதுத்துறை நிறுவனங்களுக்கு நிலக்கரி தொகுதிகள் ஏலம். வணிக சுரங்கத்திற்கு 100% அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படுகிறது. இந்த முயற்சிகள் அனைத்தும் உற்பத்தி மேம்பாடு மற்றும் இறக்குமதி குறைப்புக்கு வழிவகுத்தன. ஏல முறை/வணிக நிலக்கரி ஏலம் மூலம் உற்பத்தி தொடங்கப்படாமல் இருந்திருந்தால், சிஏஜிஆர் வளர்ச்சி விகிதத்தின்படி 150.00 மெட்ரிக் டன் நிலக்கரியை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும், ஆனால் FY 2324. ஏப்ரல் செப்டம்பரில் 125.21 மெட்ரிக் டன்களை மட்டுமே இறக்குமதி செய்துள்ளோம்.

(iii) நிலக்கரி அமைச்சகம், மின்சார அமைச்சகம், ரயில்வே அமைச்சகம், கப்பல் அமைச்சகம், வர்த்தக அமைச்சகம், எஃகு அமைச்சகம், ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய நிலக்கரி இறக்குமதி மாற்றத்துக்காக ஒரு இடை அமைச்சகக் குழு (IMC) அமைக்கப்பட்டுள்ளது. சுரங்கங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம் (MSME), தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறை (DPIIT), மத்திய மின்சார ஆணையம் (CEA), கோல் இந்தியா லிமிடெட், SCCL, பாரதீப் போர்ட் டிரஸ்ட், விசாகப்பட்டினம் போர்ட் டிரஸ்ட் மற்றும் கொல்கத்தா துறைமுகம் .

இந்தக் குழு, அந்தந்த துறையின் நிலக்கரி நுகர்வோரை நிலக்கரி இறக்குமதியை அகற்றுவதை ஊக்குவிக்க வழிகாட்டும் வகையில், நிர்வாக அமைச்சகங்களுடன் ஒரு உயர் மன்றத்தில் விவாதங்களுக்கு ஒரு தளத்தை வழங்குகிறது.

தற்போதைக்கு, நாட்டில் நிலக்கரி தேவையின் பெரும்பகுதி உள்நாட்டு உற்பத்தி மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. இருப்பினும், இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி அடிப்படையிலான (ICB) மின் உற்பத்தி நிலையங்களால் பயன்படுத்தப்படும் கோக்கிங் நிலக்கரி, ஆந்த்ராசைட் மற்றும் குறைந்த சாம்பல் வெப்ப நிலக்கரி போன்ற சில உயர் தர நிலக்கரி, அவற்றின் உள்நாட்டு உற்பத்தி கிடைக்காததால், இறக்குமதி செய்வதற்கு அவசியமானது.

உள்நாட்டில் நிலக்கரி உற்பத்தியை அதிகரிப்பதிலும், அதை அகற்றுவதிலும் அரசின் கவனம் உள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

### லம்பாடி இன மக்களை

# பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும்!

## ஒன்றிய அமைச்சரிடம் தருமபுரி எம்.பி. டாக்டர் செந்தில்குமார் வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச. 24 -

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செந்தில்குமார் “குருமா, குருமன், குரும்பா, குருமன் கவுண்டர், குரும்பன் மற்றும் குரும்பர் ஆகிய மக்களை குருமன்ஸ் என பழங்குடி பட்டியலில் தமிழக அரசின் முன்மொழிவை விரைவுபடுத்தவும் மற்றும் லம்பாடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பழங்குடி பட்டியலில் சேர்க்க வேண்டும்” என்ற கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை ஒன்றிய பழங்குடி நலன் அமைச்சர் அர்ஜூன் முண்டாவை 20.12.2023 அன்று நேரில் சந்தித்து கோரிக்கைவிடுத்தார்.

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செந்தில்குமார் ஒன்றிய பழங்குடி நலன் அமைச்சர் அர்ஜூன் முண்டாவை நேரில் சந்தித்து “குருமா, குருமன், குரும்பா, குருமன் கவுண்டர், குரும்பன் மற்றும் குரும்பர் ஆகிய மக்களை குருமன்ஸ் என பழங்குடி பட்டியலில் தமிழக அரசின் முன்மொழிவை விரைவுபடுத்தவும் மற்றும் லம்பாடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பழங்குடி பட்டியலில் சேர்க்க வேண்டும் கோரிக்கை அடங்கிய கடிதத்தின் விவரங்கள் பின்வருமாறு.

பழங்குடி சமூகமான ‘குருமன்ஸ்’ என்ற பழங்குடி சமூகத்தின் ஒத்த சொற்களை பட்டியல் பழங்குடியினர் பட்டியலில் அங்கீகரித்து இணைப்பதற்கான நீண்டகால முயற்சி தொடர்பாக எழுதுகிறேன். S.T பட்டியலில் குறும்பர் (S.T) என்ற பெயருக்கு இணையான பெயராக குருமா, குருமன், குரும்பன், குரும்பகவு ண்டர், குறும்பன் மற்றும் குரும்பர் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது மற்றும் ஒன்றிய அமைச்சருக்கும் இது பற்றி நன்கு தெரியும்.

ஒன்றிய அரசுக்கு குருமன்ஸ் (எஸ்டி) பட்டியலில் 6 ஒத்த பெயர்களைச் சேர்ப்பதற்காக தமிழ்நாடு அரசு அனுப்பிய விரிவான பரிந்துரை செய்து இருப்பதாக அறிவேன்.

சவால்கள், வரலாற்று ஆவணங்கள் மற்றும் அரசாங்க ஆதாரங்கள் அவர்களின் உரிமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்த என்னைத் ஈடுபடச்செய்தது பழங்குடி சமூகத்தின் சார்பாக நான் இந்த விஷயத்தில் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் முயற்சி களை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

12.03.2021 அன்று நாடாளுமன்றத்தின் பூஜ்ஜிய நேரத்தில் குருமன்ஸ்களின் இணையான சொற்களையும் எஸ்டி பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று இந்தப் பிரச்சினையை எழுப்பி, அதற்குப் பதிலாக 12.04.2021 அன்று ஒன்றிய பழங்குடி நலன் அமைச்சர் அலுவலகத்திலிருந்து இந்த விவகாரம் பரிசீலனையில் இருப்பதாகக் கடிதம் வந்தது.

07.04.2022 அன்று குருமா, குருமன், குரும்பா, குரும்பகவுண்டர், குரும்பன், குரும்பர் ஆகிய பெயர்களை எஸ்டி பட்டியலில் குருமன்ஸ்களுக்கு இணையான வார்த்தைகளாக அங்கீகரித்து பட்டியலிடுவதை நோக்கமாகக் கொண்டு, நாடாளுமன்றத்தில் தனிப்பட்ட உறுப்பினர் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. 21.12.2022 அன்று குருமன்ஸ் ஒத்த பெயர்களை எஸ்டி பட்டியலில் சேர்க்க நாடாளுமன்றத்தில் பேசப்பட்டது. 04.07.2023 அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நல வாரியம் இயக்குநர், டிஆர்சி, ஊட்டி ஆகியோருக்கு, தேவையான அறிக்கைகளை உங்கள் அலுவலகத்திற்கு விரைவாக அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் பட்டியல் பழங்குடியினர் பட்டியலில் “லம்பாடி” சமூக மக்களை அங்கீகரித்து இணைப்பதற்கான நீண்டகால முயற்சி தொடர்பாக டாக்டர் செந்தில்குமார் கடிதம் பின்வருமாறு. தமிழ்நாட்டில் உள்ள லம்பாடி கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக அறிவிக்கப்பட்டுள்ளனர், ஆனால் அவர்கள் அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் பட்டியல் சமூகத்தில் உள்ளனர்.

தமிழ்நாட்டில் லம்பாடி மக்களின் மொத்த மக்கள் தொகை சுமார் 2 லட்சம் ஆகும் அவற்றில் தருமபுரியில் பாராளுமன்ற தொகுதியில் மட்டும் 50,000 மக்கள் அரூர் (சிட்லிங்கி தண்டா, சிட்லிங்கி பஞ்சாயத்து), பென்னாகரம் மற்றும் தர்மபுரி தாலுகா மற்றும் மேட்டூர் தாலுகாவில் (லக்கம்பட்டி) வசித்து வருகின்றனர். இந்தச் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றிய எனது தனிப்பட்ட அறிமுகம், அவர்களைச் சேர்ப்பதற்காக தொடர்ந்து வாதிடுவதற்கு என்னை இட்டுச் சென்றது. பழங்குடி சமூகத்தின் சார்பாக நான் இந்த விஷயத்தில் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 21.12.2022 அன்று லம்பாடி சமுதாய மக்களை எஸ்டி பட்டியலில் சேர்க்க நாடாளுமன்றத்தில் பேசினேன் மற்றும் 12.08.2023 அன்று லம்பாடி சமூகத்தை எஸ்டி பட்டியலில் அங்கீகரிக்கும் நோக்கில், நாடாளுமன்றத்தில் தனிப்பட்ட உறுப்பினர் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது.

1969 ஆம் ஆண்டில், எஸ்சி/எஸ்டியைச் சேர்ப்பது மற்றும் விலக்குவது தொடர்பான மசோதா மீதான கூட்டுக் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் லம்பாடிகளை எஸ்டி பட்டியலில் சேர்க்கப் பரிந்துரைத்தது. சென்னை பல்கலைக்கழக மானுடவியலாளர்கள் நடத்திய மானுடவியல் ஆய்வின் அடிப்படையில் லம்பாடிகளை ST பட்டியலில் சேர்க்க பரிந்துரைத்துள்ளனர். அனைத்து ஆதாரங்களையும் இணைத்து அமைச்சர் பார்வைக்கு சமர்ப்பித்துள்ளார்.

குருமா, குருமன், குரும்பா, குரும்பகவு ண்டர், குரும்பன், குரும்பர் மற்றும் லம்பாடி சமூகத்தை ஆகிய பெயர்களை ST பட்டியலில் இணைத்திருப்பது வெறும் அடையாளச் செயலாக இல்லாமல், வரலாற்று அநீதிகளைச் சரி செய்வதற்கான ஒரு படியாகும். உங்கள் உடனடி நடவடிக்கை சமூகத்திற்கு மிகவும் பயனளிக்கும், சமூக கட்டமைப்பில் அவர்களின் சரியான இடத்தைப் பெற வழி வகுக்கும் என்று ஒன்றிய பழங்குடி நலன் அமைச்சர் அர்ஜூன் முண்டாவை நேரில் சந்தித்து கடிதம் வாயிலாக கோரிக்கைவிடுத்தார்.



லம்பாடி இன மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி ஒன்றிய பழங்குடி நல அமைச்சர் அர்ஜீன் முண்டாவிடம் தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி கழக உறுப்பினர் டாக்டர் செந்தில் குமார் கடிதம் வழங்கினார்.

### “பிரதமரே... நான் மல்யுத்தத்தை கைவிடுகிறேன்;

# பத்மஸ்ரீ விருதையும் திரும்ப ஒப்படைக்கிறேன்”

## மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா அறிவிப்பு!

புதுடெல்லி, டிச. 24 -

பத்மஸ்ரீ விருதை பிரதமர் மோடியிடம் திரும்ப ஒப்படைப்பதாக இந்திய மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா அறிவித்துள்ளார். இந்திய மல்யுத்த கூட்டமைப்பு விவகாரத்தில் இந்த முடிவை எடுத்துள்ள அவர், “என்னை இனி மல்யுத்தக் களத்தில் பார்க்க மாட்டீர்கள்” என்றும் கூறினார்.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவராக, அந்த அமைப்பின் முன்னாள் தலைவரும், பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவருமான பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் நெருங்கிய உதவியாளர் சஞ்சய் சிங் தேர்வு செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக பத்மஸ்ரீ விருதை திரும்ப ஒப்படைக்கும் முடிவை எடுத்துள்ளார் பஜ்ரங் புனியா.

எக்ஸ் தளத்தில் இது தொடர்பாக பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தை வெளியிட்டுள்ள பஜ்ரங் புனியா,

இந்த ஆண்டு ஜனவரி மாதம் நமது மல்யுத்த வீராங்கனைகள் பிரிஷ் பூஷன் சிங் மீது பாலியல் தொல்லைக் குற்றச்சாட்டை முன்வைத்து போராட்டத்தை தொடங்கியது நீங்கள் அறிந்திருப்பீர்கள். நானும் அவர்களின் போராட்டத்தில் கலந்து கொண்டேன். அரசு கடும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததை அடுத்து அந்தப் போராட்டம் கைவிடப்பட்டது. இதன்பின் மூன்று மாதங்கள் ஆன போதும் பிரிஜ் பூஷனுக்கு எதிராக எஃப்.ஐ.ஆர் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. நாங்கள் மீண்டும் ஏப்ரல் மாதம் வீதிக்கு வந்து போராடினோம். அப்போதும் பிரிஜ் பூஷனுக்கு எதிராக எஃப்.ஐ.ஆர் உள்ளிட்ட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, நாங்கள் நீதிமன்றத்தை நாட வேண்டியிருந்தது. அதன் பலனாக எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டது. ஜனவரியில் அவருக்கு 19 புகார்தாரர்கள் இருந்தனர். ஆனால், ஏப்ரல் மாதத்துக்குள் அந்த எண்ணிக்கை 7 ஆக குறைந்தது. இதன் பொருள் பிரிஜ் பூஷன் 12 மல்யுத்த வீராங்கனைகளிடம் தனது செல்வாக்கை காண்பித்து மிரட்டியுள்ளார் என்பதே. எங்களின் போராட்டம் 40 நாட்கள் நீடித்த சமயத்தில் மேலும் ஒரு வீராங்கனை போராட்டத்தில் இருந்து பின்வாங்கினார்.



அந்தத் தருணத்தில் எங்களுக்கு மிகவும் அழுத்தம் கொடுக்கப்பட்டது. எங்கள் போராட்ட தளம் இடிக்கப்பட்டது. நாங்கள் டெல்லியில் இருந்து வெளியேற்றப்பட்டதோடு போராட்டம் நடத்த தடை விதிக்கப்பட்டது. இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தோம். எனவே, நாங்கள் எங்கள் பதக்கங்களை கங்கை நதியில் வீச முடிவெடுத்தோம். நாங்கள் எங்கள் இதயத்திலிருந்து போராடினோம். ஆனால், ஆனால் பிரிஜ் பூஷன் போன்ற ஒரு நபரின் தொழில் பார்ட்னரும், அவரின் நெருங்கிய உதவியாளர்தான் தற்போது இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த தேர்வால் நான் மல்யுத்தத்தை கைவிடுகிறேன். இன்று முதல் நீங்கள் என்னை மல்யுத்த களத்தில் பார்க்க மாட்டீர்கள். எனது பத்மஸ்ரீ விருதையும் திரும்ப ஒப்படைக்கிறேன்” என்று பஜ்ரங் புனியா உருக்கமாக பதிவிட்டுள்ளார்.

இதனிடையே, “மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவராக பிரிஜ் பூஷணின் உதவியாளர் சஞ்சய் சிங் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் பெண் வீராங்கனைகள் தொடர்ந்து துன்புறுத்தல்களுக்கு உள்ளாவார்கள்” என்று முன்னணி மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் வேதனை தெரிவித்துள்ளார்.

அதேபோல், சாக்ஷிக்கு ஆதரவு தெரிவித்துள்ள விஜேந்தர் சிங், “ஒரு விளையாட்டு வீரராக சாக்ஷி மாலிக்கின் வலியை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. மல்யுத்த போட்டிகளில் தங்கம் வென்ற அந்த வீராங்கனை வேண்டியது எல்லாம் நீதி மட்டுமே. ஆனால், அது அவருக்குக் கிடைக்கவில்லை. இதனால், வேதனை அடைந்த அவர் ஓய்வை அறிவித்துள்ளார். இதனால், உலக அளவில் இந்தியாவின் பிம்பம் உயருமா, குறையுமா?” என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

பின்புலம் என்ன? பிரிஜ் பூஷண் சரண் சிங்குக்கு எதிராக இந்திய மல்யுத்த வீராங்கனைகளான சாக்ஷி மாலிக், வினேஷ் போகத் ஆகியோர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாலியல் குற்றச்சாட்டுகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதரவாக முன்னணி வீரரான பஜ்ரங் பூனியாவும் போராட்டத்தில் கலந்து கொண்டார். இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிமன்றம், பிரிஜ் பூஷண் சரண் சிங் மீது வழக்கு பதிவு செய்ய உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து அவர், பதவியை இழந்தார்.

இந்தப் போராட்டத்தின் போது பிரிஜ் பூஷண் சரண் சிங்கின் ஆதரவாளர்கள் தேர்தலில் போட்டியிடக் கூடாது என சாக்ஷிஉ மாலிக் உள்ளிட்ட வீராங்கனைகள் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கையை மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் ஏற்றுக்கொண்டிருந்தார்.

இந்நிலையில், பிரிஜ் பூஷண் சரண் சிங் ஆதரவாளரான சஞ்ஜய் சிங் புதிய தலைவராக தேர்வாகி உள்ளது போராட்டம் நடத்திய மல்யுத்த வீராங்கனைகளை அதிர்ச்சி அடைய செய்துள்ளது. 15 நிர்வாகிகளை தேர்வு செய்வதற்காக நடைபெற்ற தேர்தலில் பிரிஜ் பூஷண் சரண் சிங்கின் ஆதரவாளர்கள் 13 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

**‘மல்யுத்தத்தை விட்டு விலகுகிறேன்’**

இந்திய மல்யுத்த சங்கத்தின் தலைவராக சஞ்ஜய் சிங் தேர்வாகி உள்ள நிலையில், சாக்ஷி மாலிக் மல்யுத்த போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர், கண்ணீர் மல்க கூறும்போது, “நாங்கள் எங்கள் இதயத்திலிருந்து போராடினோம், ஆனால் பிரிஜ் பூஷனின் வணிக கூட்டாளியும் அவரது நெருங்கிய உதவியாளருமான சஞ்சய் சிங் தலைவராக தேர்வாகி உள்ளார். இதனால் நான், மல்யுத்தத்தை விட்டு விலகுகிறேன். நாங்கள், ஒரு பெண் தலைவராக வரவேண்டும் என விரும்பினோம். ஆனால் அது நடக்கவில்லை” என்றார்.



தலைமைச் செயலாளர் சிவ்தாஸ்மீனா, நேற்று (23.12.2023) தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த அதிகனமழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள், எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் செங்குளம் ஓடை முதல் உப்பாத்து ஓடை வரை செல்லும் மழை நீர் வடிகால் பணிகளை பார்வையிட்டார். உடன் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

அதானி, அம்பானிகளுக்கு பல லட்சம் கோடி மக்கள் வரிப்பணத்தை அள்ளித்தரும்

ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் மீது மனிதாபிமானம் எள் அளவும் இல்லாமல் வஞ்சிக்கிறது!

# மலிவான அரசியல் ஆதாயம் தேடுகிறார் ஒன்றிய நிதி அமைச்சர்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கடும் கண்டனம்!



சென்னை, டிச. 24 -

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்தி அறிக்கை வருமாறு:-

பா.ஜ.க. ஒன்றிய அரசின் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் “இண்டியா” கூட்டணி உருவாக்கி வரும் அரசியல் பேரலைகளை கண்டு அரண்டு போய் பிதற்றி வருகிறார்.

வடகிழக்கு பருவமழை காலங்களில், வங்கக்கடலில் காற்றழுத்த மண்டலத்தால் உருவாகும் இயற்கை சீற்றம் குறித்தும், அதனை எதிர்கொள்ளும் பாதுகாப்பு மற்றும் தடுப்பு ஏற்பாடுகள் செய்திருந்த, தமிழ்நாடு அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பேரழிவின் விளைவுகளை பெருமளவு கட்டுப்படுத்தி குறைத்தது என்பதை நிர்மலா சீத்தாராமன் மூடி மறைக்கிறார்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வர்தா புயல் இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்ட பேரிடர் இழப்புகளில் கற்றுக் கொண்ட படிப்பினை அடிப்படையில் உடனடி திட்டங்கள், தொலை நோக்கு நிரந்தர திட்டங்கள் என்ற முறையில் விரிவான பாதுகாப்புத் திட்டங்கள் ஒரு லட்சத்து, 27 ஆயிரத்து 692 கோடி மதிப்பில் தயாரித்து அதற்கான நிதியை வழங்குமாறு தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசிடம் கேட்டுக் கொண்டது. ஆனால், ஒன்றிய அரசு வெறும் 4.61 சதவீத நிதி மட்டுமே வழங்கி தமிழக மக்களை வஞ்சித்து விட்டது. தற்போது ஏற்பட்டிருக்கும் பேரிடர் இழப்புகளை எதிர் கொள்ள தமிழ்நாடு அரசு 21 ஆயிரத்து 692 கோடி ரூபாய் நிதியுதவி கோரியுள்ள நிலையில், ஒன்றிய அரசின் வன்மம் மேலும் தொடரும் என்பதையே நிதி அமைச்சர் வெளிப்படுத்துகிறார்.

தென் மாவட்டங்களுக்கு ஏற்படும் பெரு மழை ஆபத்து டிசம்பர் 12 ஆம் தேதியே அம்மையார் அறிந்தது உண்மை எனில், முக்கியத்துவம் வாய்ந்த அந்தச் செய்தியை ஏழு நாள் கழித்து, ஊடகங்கள் வாயிலாக வெளியிடுவது ஏன்?

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை பெரு மாநகர் மாவட்டம் உட்பட ஒன்பது மாவட்டங்கள் இயற்கை சீற்றத்தால் நிலை குலைந்து கிடக்கும் நிலையில், தமிழ்நாடு அரசு மன்றாடிக் கேட்ட பேரிடர் நிவாரண நிதியை வழங்க கவனம் செலுத்தாத ஒன்றிய நிதி அமைச்சர், வழக்கமாக வழங்கப்படும் பேரிடர் நிதி தவிர, தற்போது ஏற்பட்டிருக்கும் பேரிடரை எதிர் கொள்ள, தமிழ்நாடு கோரியுள்ள கூடுதல் நிதி இல்லை என கை விரித்து நிற்பதற்கு நிதியமைச்சர் வெட்கப்பட வேண்டும்.

அதானி, அம்பானி போன்ற பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பல லட்சம் கோடி மக்கள் வரிப்பணத்தை அள்ளி, அள்ளித் தரும் பா.ஜ.க. ஒன்றிய அரசு, மாற்றுக் கருத்தும் கொள்கையும் கொண்ட மாநில அரசுகளுக்கு எதிராக ஆளுநர் மாளிகைகளும், அரசியலமைப்பு நிறுவனங்களும் ஏவி விடப்பட்டிருப்பதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த வரிசையில் தேசிய பேரிடர் மீட்புக் குழுக்களையும் சேர்த்துக் கொண்டார்களா?

அடர்த்தியான அரசியல் மற்றும் அரசுப் பணிகளுக்கு மத்தியில் முதலமைச்சர், பிரதமரை சந்தித்து முறையிட நேரம் கேட்டபோது, மாற்றி, மாற்றி கூறிய போதும் நள்ளிரவு வரை காத்திருந்து, பிரதமரிடம் விரிவாக எடுத்துக் கூறியதை, நிதிய மைச்சர் அறிந்து கொள்ளாதது ஏன்?

நாடாளுமன்ற பாதுகாப்பில் ஏற்பட்ட படுதோல்வி, இதற்காக நியாயமும் விளக்கமும் கேட்ட 146 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்த ஜனநாயக படுகொலை, மாநில உரிமைகளை பறித்து, மையத்தில் குவிக்கும் அதிகார வெறி என எதேச்சதிகார ஒன்றிய அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் சூழலில், “இண்டியா” கூட்டணி கண்டு நிதியமைச்சர் ஆத்திரமடைந்து தமிழ்நாடு முதலமைச்சர் மீது ஆசிட் வார்த்தைகளை அள்ளி வீசுகிறார்.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் வெள்ளம் வடியாத நிலையில், தென் மாவட்டங்களில் பெரு மழையால் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் விளைந்த நிலையில் நீரில் மூழ்கியும். வாழைகள், பயிறு வகைகள், சிறு கிழங்குகள் உள்ளிட்ட பயிர்கள் சேதமடைந்து விட்டன. நூற்றுக்கணக்கான கால் நடைகள் மழை வெள்ளத்தால், அடித்துச் செல்லப் பட்டுள்ளது. ஏரிகள், குளங்கள், கண்மாய்களில் ஏற்பட்ட உடைப்புகள், சாலைகள் துண்டிப்பு என வரலாறு காணாத சேதாரத்தை சீர்படுத்தி வரும் நேரத்தில், அதற்கு தேவையான பேரிடர் கால நிதியுதவி செய்து உதவும் மனிதாபிமானம் எள் அளவும் இல்லாமல், ஊடகங்கள் வழியாக மலிவான அரசியல் ஆதாயம் தேடும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கருத்துக்களை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு இரா.முத்தரசன், தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

ஹிஜாப் அணிய தடை!

## திரும்பப் பெறப்படுவதாக முதல்வர் சித்தராமையா அறிவிப்பு!

பெங்களூரு, டிச. 24 -


கர்நாடக மாநிலத்தில் உள்ள கல்வி நிறுவனங்களில் இஸ்லாமிய மாணவிகள் ஹிஜாப் அணிவதற்கு முந்தைய பா.ஜ.க. ஆட்சியில் தடை விதிக்கப்பட்டது.

இதற்கு இஸ்லாமிய அமைப்புகள் உள்பட பல்வேறு தரப்பினர் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்தது.

ஹிஜாப் தடையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த நிலையில், கல்வி நிறுவனங்களில் ஹிஜாப் அணிவதற்கான தடையை திரும்பப் பெறுவதாக கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா அறிவித்துள்ளார்.

---

# ஐயா! நின் நினைவிடத்தில் சூளுரைப்போம்!



ஈரோட்டு நாயகனே! தமிழர் தங்கள்
இனமானச் சூரியனே! எட்டுத் திக்கும்
மார்தட்டிச் சுழன்றுவந்தாய்! மனித னுக்கு
மானமும் அறிவும்தான் அழகே என்றாய்!
கூர்மிக்கச் சிந்தனையால் குரல்கொ டுத்தாய்!
கொட்டாவித் துயில்கலைத்தாய்! எழுச்சி தந்தாய்!
போராடி உரிமைகளைப் பெற்றுத் தந்தாய்!
பொதுப்பணிக்கே கொடைதந்தாய் உனது வாழ்வை!

பாடிவைத்த பழமைகளைச் சாடி வைத்தாய்!
பாமரர்க்கும் பகுத்தறிவை விதைத்தாய்! மூடக்
காடெரித்த யுகக்கனலே! ஐயா, உன்றன்
கைத்தடியின் வளைவிலும்கம் பீரம் உண்டே!
தாடிவைத்த குழந்தைநீ சிரிக்கும் போதில்
தலைமுதல்பா தம்வரைக்கும் மகிழ்ச்சி பொங்கும்!
ஏடெடுத்தே நீ,கணைகள் தொடுக்கும் போதில்
எதிரிகளின் அடித்தளமே நொறுங்கிப் போகும்!

மூன்றுவிழுக் காடுள்ள ஒருகூட் டத்தின்
மூவாயி ரம்வருட ஆதிக் கத்தைச்
சான்றுசொல்லி உலகுக்கே எடுத்து ரைத்தாய்!
சனாதனத்தின் கொடுமைகளைத் தோலு ரித்தாய்!
ஆன்றோராய் சான்றோராய் கல்வி பெற்றே
அடித்தட்டு மக்களையும் உயரச் செய்தாய்!
தோன்றின்நற் புகழோடு தோன்றி வந்தாய்!
தொண்டுசெய்து பழுத்தபழம் ஆகி நின்றாய்!

அலைவைத்த கடலைப்போல் இயங்கி வந்தாய்!
ஆயிரமா? அதற்கதிகம் பிறைகள் கண்டாய்!
வலைவைத்துப் பார்த்தார்கள், அறுத்தெ றிந்து
வலம்வந்தாய் நாடெங்கும்! கொண்டு வந்து,உன்
தலைவைக்க வேண்டும்என்ற நரிக்கூட் டத்தைத்
தரைமட்டம் செய்தாய்! நம் கலைஞ ருக்குச்
சிலைவைத்துப் பேரன்பைப் பொழிந்தாய்! என்றும்
சிதையாத புகழுக்கே புகழ்கொ டுத்தாய்!

தடியெடுத்து நீஅன்று நடந்த தால்தான்
தமிழர்க்கே அறிஞர்அண்ணா கிடைத்தார்! உன்றன்
குடியரசின் உலைக்கூடத் தகிப்பி லேதான்
“ குவளைப்பூ" போர்க்கருவி ஆன தென்பேன்!
திடலுக்குள் மட்டும்நீ இல்லை! கண்ணீர்த்
திவலைகளைத் துடைத்தெறிந்து சொல்வேன், எங்கள்
உடலுக்குள் உயிரணுக்க ளெல்லாம் உள்ளாய்!
உனைவிட்டுத் தமிழர்க்கு வரலா றேது?

அரியார்க்கும் அரியாராய் பிறந்து வந்தாய்!
அடுத்தடுத்துச் சாதனைகள் புரிந்து வந்தாய்!
வரலாற்றில் “ஈழவர்"தம் உரிமை வென்ற
“வைக்கத்தின்" செருக்களத்தை மறக்கப் போமோ?
பெரியார்க்கும் பெரியார்நீ! அதனா லன்றோ
பெண்ணுரிமை முன்னுரிமை காணச் செய்து
சரியான பாதைக்கே அழைத்து வந்தாய்!
சமத்துவம் சமதர்மம் தழைக்கச் செய்தாய்!

வியாபாரக் குடும்பத்தில் பிறந்தாய்! உன்னை
விலைபேச எவராலும் முடிய வில்லை!
நியாயத்தின் வடிவம்நீ, அதனால் உன்னை
நீதிமன்றப் பொய்வலைகள் நெருங்க வில்லை!
தியாகம்நீ செய்யவில்லை! தியாகம் உன்னைச்
செய்தது!நீ தரைவாழ்ந்த உலக வாழ்க்கை
மயானத்தின் முடிவல்ல! காலத் தாலும்
மடியாத சரித்திரத்தின் புதுத்தொ டக்கம்!

நீண்டநெடுந் தொலைநோக்கில் உனது கொள்கை
நீட்சிகண்டு “தளபதி"யின் ஆட்சி கண்டு
தாண்டிமிகக் குதிக்கிற து பகைவர் கூட்டம்!
தலைதூக்கி “மனுதர்மம்" போடும் ஆட்டம்!
மீண்டும்உன்றன் “கைத்தடிக்கு" வேலை வந்து
விட்டதையா! சனாதனத்தை விரட்டு தற்கே!
மூண்டெழுவோம் ஐயா,உன் நினைவி டத்தில்!
முறியடிப்போம் சதியை!எனச் சூளு ரைப்போம்!



கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்.**

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண் துறை அமைச்சர்

# கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தாயார் அமராவதி அம்மாள் மறைவு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் மலரஞ்சலி!

விருதுநகர், டிச. 24 -

விருதுநகரில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தாயார் மறைந்த அமராவதி அம்மாள் உடலுக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

உடன் நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற சபாநாயகர் மு.அப்பாவு, அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சு.முத்துசாமி, சக்கரபாணி, பெரியகருப்பன், எஸ்.எஸ்.சிவசங்கர், ரகுபதி, மூர்த்தி, ராஜ கண்ணப்பன் ஆகிய அமைச்சர்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், கோ.தளபதி, தங்கபாண்டியன், காதர் பாட்ஷா என்ற வெள்ளைச்சாமி, ரகுராமன், அசோகன், பாராளுமன்ற உறுப்பினர்கள் நவாஸ் கனி, தனுஷ் குமார், மாணிக்கம் தாகூர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் ராஜா சொக்கர், வலது கம்யூனிஸ்ட் மாநிலத் தலைவர் முத்தரசன், கம்யூனிஸ்ட் லிங்கம், கம்யூனிஸ்ட் ராமசாமி, கம்யூனிஸ்ட் முருகேசன், கம்யூனிஸ்ட் ஜெயகுமார், தேனி வசந்தன், தி.க.திருப்பதி, செயற் குழு உறுப்பினர் சேர்மன் சுப்பாராஜா, வி.பி.ராசன், தனுஷ்கோடி, ஒன்றிய செயலாளர்கள் காரியாபட்டி செந்தில், திருச்சுழி பொண்ணு தம்பி, சந்தான பாண்டியன், காரியாபட்டி மந்திரி ஓடை கண்ணன், மல்லாக்கினர் முருகேசன், அருப்புக்கோட்டை பால கணேஷ், பொன்ராஜ், ஆவடை அம்மாள், மாவட்ட பொருளாளர் சாகுல் ஹமீது, ராசா அருள்மொழி, ஆர்.கே.துரை, வத்திராயிருப்பு முனியாண்டி, தங்க மாங்கனி நகர் மன்ற தலைவர் தங்கம் ரவி கண்ணன், ராஜ பாளையம் பவித்ராசியாம், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், அருப்புக் கோட்டை சேர்மன் சிவப் பிரகாசம் சுந்தரவல்லி, சாத்தூர் சேர்மன் குருசாமி கடற்கரை ராஜ், மாநில வர்த்தக அணி வனராஜா, சிவகாசி நகர செயலாளர் காளிராஜன், மாநகரச் செயலாளர் உதயசூரியன், ஒன்றிய சேர்மன் விவேகராஜன், முத்துலட்சுமி தங்கராஜ், எம்.ஏ.சந்திரன் வடக்கு மாவட்ட இளைஞரணி கிருஷ்ணகுமார், விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி.ராஜகுரு, தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி கேகே.எஸ்.எஸ்.ஆர். ரமேஷ், கே.கே.எஸ்.எஸ். ஆர்.நாராயணன், ஒன்றிய துணைச் செயலாளர் குருசாமி, பொதுக்குழு உறுப்பினர் பொ. மதியழகன், மாவட்ட வர்த்தக அணி போஸ் என்ற ஜெயச்சந்திரன், ஒன்றிய சேர்மன் சுமதி ராஜசேகர், பொதுக் குழு உறுப்பினர் சுதாகர், மாவட்ட விவசாய அணி நேஷனல் ராமர், மாவட்ட தொழிலாளர் அணி ஏ.எஸ். கே.ரமேஷ் குமார், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி எல் திருமாறன், நகர துணை செயலாளர் மரியராசு, கலை இலக்கிய பகுத்தறிவு பாசறை மலை ராசன், திண்டுக்கல் தி.மு.க. கிழக்கு மாவட்டச் செயலாளர் சத்தியமூர்த்தி, மாநில விவசாய அணி இணைச் செயலாளர் முத்துராமலிங்கம், மாவட்டச் செயலாளர் மதுரை சேடப்பட்டி மணிமாறன், அருப்புக்கோட்டை நகரச் செயலாளர் ஏ.கே.மணி, கோகுலம் எம் தங்கராஜ், செட்டி குறிச்சி கே.வி.கே.ஆர். பிரபாகரன், சீனிவாச பெருமாள், மாவட்ட துணைச் செயலாளர் ஏ.ஆர். சுபேதா, மண்டல மின்வாரிய தொ.மு.ச. அண்ணாதுரை அழகு ராமானுஜம், வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி மித்ரு நாகேந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர் குருசாமி, காரியாபட்டி ஒன்றிய செயலாளர் கண்ணன் செல்வம், இளைஞர் அணி அருப்புக்கோட்டை பாபுஜி சூரிய நாராயணன், கல்லூரணி ராஜாமணி நகர் மன்ற தலைவர் மாதவன், தனலட்சுமி, துளசிராமன், நகரவைத் தலைவர் ஸ்ரீராம் காசிராஜன், மகளிர் அணி சுமதி ராமமூர்த்தி, சரஸ்வதி, பாண்டிச்செல்வி, முத்துமாரி, வகிதா ரகுமான், கலாவதி பிர்தவ்ஸ் ராஜா சுதா ராணி, ஆவியூர் செல்வி உமாராணி, சந்துருசன் பேக்கரி முருகன் ப்ரோஸ் கான், நகர இளைஞரணி ஏ எஸ் கே அஜய் குமார், பாசில் பாண்டி யோகராஜ், சதீஷ் சுந்தர் ரங்கராஜ், உஸ்மான் சாதிக் அலி, பாண்டி நகர் சுரேஷ், மாவட்ட தொழிலாளர் அணி பழனிச்சாமி மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் அனைத்து அணியை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

---



தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன், வீட்டு வசதி வாரியத்தின் புதிய பொலிவூட்டப்பட்ட இணையதளத்தை நேற்று முன்தினம் (22.12.2023) கோயம்பேடு, வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலகத்தில் தொடங்கி வைத்தார். வாரிய மேலாண்மை இயக்குநர் எ.சரவணவேல்ராஜ், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் சரவணமூர்த்தி, வாரிய நிதி ஆலோசகர் அன்பழகன், தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன், வாரிய தலைமை வருவாய் அலுவலர் புண்ணியகோடி, மாவட்ட வருவாய் அலுவலர் (திட்டங்கள்) திருமதி. ஃபர்கத் பேகம், வருவாய் அலுவலர் (நில எடுப்பு) அன்பழகன் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# நாடு முழுவதும் புதிதாக 752 பேருக்கு கொரோனா!

புதுடெல்லி, டிச. 24 -

நாடு முழுவதும் நேற்று முன்தினம் 328 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டு இருப்பதாக ஒன்றிய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதேபோல், கேரளாவில் நேற்று முன்தினம் ஒருவர் கொரோனா தொற்று பாதித்து பலியானதாகவும் ஒன்றிய சுகாதார அமைச்சகம் குறிப்பிட்டிருந்தது. இந்நிலையில் ஒன்றிய சுகாதார அமைச்சகம் நேற்று வெளியிட்ட புள்ளிவிவரங்களில், நாடு முழுவதும் புதிதாக 752 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கையானது, நேற்று முன்தினம் வெளியிட்ட புள்ளி விவரங்களுடன் ஒப்பிடுகையில் 2 மடங்கு அதிகமாகும். அதேபோல் 7 மாதங்களில் இல்லாத அளவுக்கு புதிய உச்சமாகும். மேலும் நேற்றைய புள்ளி விவரங்களில் கொரோனா பாதித்து 4 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையும் நேற்றைய புள்ளி விவரங்களுடன் ஒப்பிடுகையில் 4 மடங்கு அதிகமாகும்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி தேனியில் தனியார் மண்டபத்தில் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் தலைமையில் தேனி பாராளுமன்ற தேர்தல் பணி குறித்து பாக முகவர்கள் BLA 2 மற்றும் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் பொன்ராஜ், மாவட்ட அவை தலைவர்பிடி செல்ல பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர்கள் திருக் கண்ணன், நாகஜோதி, அருணாசலம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முருகேசன் மற்றும் மாவட்ட நகர, ஒன்றியக் கழக , பேரூர் வார்டு பகுதி கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நகரச் செயலாளர் நாராயண பாண்டியன் நன்றி உரையாற்றினார்.




சென்னை கலைவாணர் அரங்கத்தில், நேற்று முன்தினம் (22.12.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு, தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் முன்னிலையில், "கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023"-இன் சின்னம் மற்றும் இலச்சினையை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்திய செஸ் கிராண்ட்மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் வாள்வீச்சு வீராங்கனை பவானி தேவி ஆகியோர் உடனிருந்தனர்.

## ‘கேலோ இந்தியா’ போட்டிகள் ‘வேற்றுமையில் ஒற்றுமை’யின் அடையாளமாக இருக்க வேண்டும்!

## விளையாட்டு வீரர்கள் போட்டியிடும் மைதானங்கள் – வெறும் களங்கள் மட்டுமல்ல;

# நமக்கு வாழ்க்கைப் பாடத்தை கற்றுக்கொடுக்கும் வகுப்பறைகள்!

## ஒன்றிய விளையாட்டு - தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் முன்னிலையில் ‘6வது கேலோ இந்தியா’ இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 இலச்சினையை வெளியிட்டு - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, டிச. 24-**

**விளையாட்டு வீரர்கள் போட்டியிடும் அரங்குகள் வெறும் களம் மட்டுமல்ல; வாழ்க்கைப் பாடங்களின் வகுப்பறைகள் என்று சென்னையில் நடைபெற்ற விழாவில் ‘6வது கேலோ இந்தியா’ இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023-இன் இலச்சினை, சின்னம், சுடர் மற்றும் ஜெர்சி ஆகியவற்றினை ஒன்றிய விளையாட்டு - தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் முன்னிலையில் வெளியிட்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், போட்டிக்கான இலச்சினையை அறிமுகப்படுத்தி உரையாற்றியதாவது:

தமிழ்நாட்டில் முதன்முறையாக, 2024 ஜனவரி 19 முதல் 31ஆம் தேதி வரை, ‘கேலோ இந்தியா இளைஞர் போட்டிகள் 2023’ எனும் வரலாற்றுச் சிறப்புமிக்க போட்டி நடைபெற உள்ளது. இன்று அதன் தொடக்க விழாவை நடத்துவதன் மூலம், நாமும் வரலாற்றில் ஒரு பகுதியாக இருப்பதை நினைத்துப் பெருமை கொள்கிறோம்.

முதலாவதாக, தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டுத் திறமை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுக்காக நாம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைப் புரிந்துகொண்டு, இந்தப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்துவதற்கு முன் வந்த இந்திய அரசுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டுத் திறமைகளை அடையாளம் கண்டு, இந்த வாய்ப்பை நல்கியது நிச்சயமாக தமிழ்நாட்டின் முன்னேற்றத்தில் பெருமை கொள்ளும் தருணமாக இருக்கிறது.

### விளையாட்டுத் திறமைகளை ஊக்குவிக்கும் களமாக தமிழ்நாடு!

விளையாட்டுத் திறமைகளை ஊக்குவிக்கும் ஒரு களமாக தமிழ்நாடு எப்போதும் இருந்து வந்திருக்கிறது. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சேப்பாக்கம் அரங்கம் போன்ற பிரபலமான அரங்கங்களில் சிறப்புமிக்க விளையாட்டு வீரர்கள் பலர் விளையாடி, சாதனைகள் புரிந்து, இந்த தேசத்தைப் பெருமைப்படுத்தி இருக்கிறார்கள்.

கேலோ இந்தியா இளைஞர் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்துவதன் மூலம், அந்தப் பெருமைமிகுந்த பாரம்பரியத்துக்கு நாமும் பங்களிக்கிறோம். இதன் மூலம், அடுத்த தலைமுறை விளையாட்டு நாயகர்களை நாம் உருவாக்க உள்ளோம்.

விளையாட்டுத்துறையின் மேம்பாட்டுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வரும் சீரிய முயற்சிகளின் பலனாக, இன்றைக்கு கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2023, நம்முடைய மாநிலத்தில் நடத்தப்படுகிறது. தமிழ்நாடு அரசை பொறுத்தவரை எந்த அளவுக்கு கல்வி – சுகாதாரம் போன்ற துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறதோ, அதே அளவுக்கு விளையாட்டு மேம்பாட்டிற்காகவும் முக்கி யத்துவம் அளித்து வருகிறது.

தமிழ்நாட்டில், வளமான விளையாட்டுப் பாரம்பரியம் உள்ளது. இங்குள்ள வீரர்கள், நம் நாட்டுக்காகப் பல பெருமைகளை ஈட்டித் தந்துள்ளார்கள். நாடு முழுவதும் உள்ள விளை யாட்டுத்துறை சார்ந்த திறமையாளர்களை அடையாளம் கண்டு அவர்களை அங்கீகரிக்கும் வண்ணம் கேலோ இந்தியா யூத் கேம்ஸ் நடத்தப்பட்டு வருகிறது.

விளையாட்டுத்துறையின் மீது மிகப்பெரிய விழிப்புணர்வு இந்திய இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இதன் காரணத்தால் தான், உலகின் எந்த மூலையில், எந்த போட்டி நடைபெற்றாலும், அதில் இந்திய வீரர் வீராங்கனையர்கள் வெற்றி வாகை சூடி வருகிறார்கள்.

குறிப்பாக தமிழ்நாட்டு வீரர் – வீராங்கனையரின் பங்களிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. தடகளம் – செஸ் – ஹாக்கி – ஸ்குவாஷ் என எல்லா விளையாட்டுகளிலும் தமிழ்நாட்டு வீரர் – வீராங்கனையர் தனி முத்திரை பதித்து வருகின்றனர்.

இப்படியான பின்னணியில், தருணத்தில், இங்கு கேலோ இந்தியா இளைஞர் போட்டிகளை நடத்துவதன் மூலம், நம்மால் மேலும் பல இளைஞர்களை விளையாட்டுத் துறையின்பால் ஈர்க்க முடியும்.

தமிழ்நாட்டிலிருந்து நிறைய வீரர் – வீராங்கனையரை உருவாக்க வேண்டும். தேசிய அளவில் மட்டுமல்ல – சர்வதேச அளவிலும் அவர்கள் சாதிக்க வேண்டும் என்ற உறுதியுடன் செயல்பட்டு வருகிறோம்.

### ‘கேலோ இந்தியா’ போட்டிகள் சிறந்த தளமாக இருக்கும்!

நம்முடைய இளைஞர்கள் தங்களிடம் உள்ள பல்வேறுவிதமான விளையாட்டுத் திறமைகளை எடுத்துக்காட்டுவதற்கு, கேலோ இந்தியா இளைஞர் போட்டிகள் சிறந்த தளமாக இருக்கும்.

மாநில எல்லைகள் கடந்து, நாடு முழுவதுமுள்ள இளைஞர்களை ஒன்றாகத் திரட்டி, அவர்களிடையே நட்புறவை வளர்த்து, மைதானத்துக்கு வெளியேயும் தோழமைப் பண்பை வளர்க்கும் நிகழ்வாக இந்தப் போட்டிகள் இருக்கின்றன.

விளையாட்டில் சாதித்து வருவோருக்கு புதிய புதிய களங்களை அமைத்துக் கொடுப்பதுடன், புதிய திறமையாளர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்பதில் தமிழ்நாடு அரசு உறுதியுடன் உள்ளது. இதற்காக ஏராளமான முயற்சிகளை தொடர்ந்து எடுத்து வருகிறோம். அதில் மிக முக்கியமானது, 44 ஆவது FIDE Chess Olympiad சென்னை மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டது. கடந்த ஓராண்டில் மட்டும் ஏராளமான சாதனைகளை – இன்னும் சொல்லப்போனால், பல ஆண்டுகளில் செய்ய வேண்டிய அம்சங்களை, ஒரே ஆண்டில் செய்து முடித்துள்ளோம்.

கிராமப்புறங்கள் மற்றும் விளிம்புநிலையில் உள்ள இளைஞர்களின் விளையாட்டுத் திறத்தை வெளிக் கொண்டு வர, தமிழ்நாடு அரசு ‘முதலமைச்சர் கோப்பை 2023’ போட்டிகளை நடத்தியது. பொருளாதாரம் என்பது விளையாட்டு வீரர் – வீராங்கனையருக்கு ஒரு தடையாக இருக்க கூடாது என்பதற்காக, தமிழ்நாடு சாம்பியன்ஸ் ஃபவுண்டேசனை தொடங்கினோம்.

விளையாட்டுத் துறையில், அரசு மற்றும் விளையாட்டுத் துறை சார்ந்த அனைத்துப் பங்களிப்பாளர்கள் ஆகியோரிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காக, ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’யைத் தொடங்கியிருக்கிறோம். இதன் மூலம், விளையாட்டுத் துறை மற்றும் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்த பெருநிறுவனங்களும் தனிநபர்களும் தங்கள் பங்களிப்பைச் செய்ய இயலும்.




இந்த அறக்கட்டளையின் கீழ், நன்கொடையாளர்கள் தரும் பங்களிப்புகள் மூலம் விளையாட்டுத் துறைக்குத் தேவையான பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தேவைகள் வெளிப்படையாக நிறைவேற்றப்படுகின்றன.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் முக்கிய இலக்கே, பொருளாதாரத்தில் பின் தங்கிய விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி செய்வதும், மாநிலத்தில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதும்தான்.

‘எலைட் விளையாட்டு வீரர்களுக்கு உதவித் தொகை திட்டம்’, ‘சாம்பியன்ஸ் மேம்பாட்டுத் திட்டம்’, ‘சர்வதேசப் பதக்க இலக்குத் திட்டம்’ என வீரர் – வீராங்கனையருக்கு நிதி உதவி அளித்திட தமிழ்நாடு அரசு சார்பில் ஏராளமான திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

### முதல்வர் தனது சொந்தப் பணத்திலிருந்து ரூ.5 இலட்சம் வழங்கினார்!

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் கீழ், இதுவரை அரசுத் துறைகள், தனியார் நிறுவனங்கள் ஆகியோரிடமிருந்து 22 கோடி ரூபாய் நன்கொடை கிடைக்கப் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த முயற்சிக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது சொந்தப் பணத்திலிருந்து ரூ.5 இலட்சம் வழங்கினார்கள்.

கடந்த ஏழு மாதங்களில், சுமார் 6 கோடி ரூபாய், பல்வேறு விளையாட்டு வீரர்களுக்கு, அவர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு, தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான பயணச் செலவுகளைச் சமாளிப்பதற்கு என பல விஷயங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் கீழ் இவ்வாறு நிதியுதவி பெற்ற வீரர்கள், சர்வதேச அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வென்று 13 பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை தொடர்ந்து நம் வீரர் – வீராங்கனையருக்கு துணை நிற்கும், அவர்களின் வெற்றியை சாத்தியப்படுத்த எல்லா வகையிலும் உதவிடும் என்று இங்கு உறுதியளிக்க விரும்புகிறேன். அரசின் இந்த முயற்சிகளால் தான் தமிழ்நாட்டு வீரர்கள் உலகின் எந்த மூலைக்கு சென்று விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டாலும் கோப்பையுடனும் – பதக்கங்களுடனும் திரும்பி வருகின்றனர்.

சீனாவில் நடைபெற்ற 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 28 பதக்கங்களை குவித்த தமிழ்நாட்டு வீரர் – வீராங்கனையருக்கு நம் முதலமைச்சர் அவர்கள் ரூ.9 கோடியே 40 லட்சத்தை உயரிய ஊக்கத்தொகையாக வழங்கினார்கள்.

தேசிய சீனியர் மகளிர் கால்பந்தாட்ட போட்டியில், தங்கம் வென்ற தமிழ்நாட்டு மகளிர் அணிக்கு ரூ.60 லட்சத்தை ஊக்கத்தொகையாக வழங்கினோம்.

World Cup Chess Championshipல் வெள்ளி வென்ற தம்பி பிரக்ஞானந்தாவுக்கு ரூ.30 லட்சம் உயரிய ஊக்கத்தொகையை கழக அரசு வழங்கியது. மாற்றுத்திறனாளி வீரர் – வீராங்கனையருக்கும் கழக அரசு தொடர்ந்து துணை நின்று வருகிறது.

சமீபத்தில் நடைபெற்ற கேலோ இந்தியா பாரா யூத் கேம்ஸில் கூட 20 தங்கப்பதக்கம் – 8 வெள்ளிப்பதக்கம் மற்றும் 14 வெண்கலப் பதக்கங்களை பெற்று தமிழ்நாடு மூன்றாவது இடத்தை பிடித்தது.

மேலும், ஜெர்மனியில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான தடகளப்போட்டி, சீனாவில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான ஆசிய தடகள போட்டி போன்றவற்றிலும் தமிழ்நாட்டு வீரர்கள் பதக்கங்களை குவித்து பெருமைத் தேடித்தந்தனர்.

கடந்த ஓராண்டில் விளையாட்டுத்துறை கட்டமைப்பை மேம்படுத்த ஏராளமான நடவடிக்கைகளை நம் திராவிட மாடல் அரசு எடுத்து வருகிறது.

10 ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்குவாஷ் உலகக் கோப்பை மற்றும் ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டிகள் சென்னையில் நடைபெற்றன. உலக அலைச்சறுக்கு (சர்ஃபிங்) லீக் QS 3000 மற்றும் ஹெச்.சி.எல் சைக்ளத்தான் போட்டிகள் இங்குதான் நடைபெற்றன. சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் 2023 போட்டியையும் இங்குதான் நாம் நடத்தினோம்.

### விளையாட்டுத் துறையை வலுப்படுத்த தொடர்ந்து உழைப்போம்!

தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையை இன்னும் வலுப்படுத்த நாம் தொடர்ந்து உழைப்போம்.

மணிப்பூர் கலவரம் நடைபெற்றபோது, அந்த மாநிலத்தின் வாள்வீச்சு (ஃபென்சிங்) விளையாட்டு வீரர்களை தமிழ்நாட்டுக்கு அழைத்து, அவர்களின் பயணம், தங்குமிடம், பயிற்சி என அனைத்துக்குமான செலவுகளையும் நாமே ஏற்றுக்கொண்டு அவர்களை ஊக்கப்படுத்தினோம்.

இங்கு இன்னொரு விஷயத்தையும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் நடைபெற்ற ‘சி.ஐ.ஐ. ஸ்போர்ட்ஸ் பிஸினஸ் அவார்ட் 2023’ நிகழ்ச்சியில், நாட்டிலேயே, ‘விளையாட்டுத் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஊக்கப்படுத்தும் மாநிலம்’ என்ற விருதை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பெற்றிருக்கிறது. விளையாட்டுத் துறைக்கு தமிழ்நாடு அரசு கொடுத்து வரும் முக்கியத்துவத்தை இந்த விருது பறைசாற்றுகிறது.

விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஒன்றிய அரசு ஆண்டுதோறும் விருது வழங்கி கௌரவித்து வருகிறது. இந்த ஆண்டு, தமிழ்நாட்டைச் சேர்ந்த செஸ் வீராங்கனை ஆர்.வைஷாலி, ஸ்குவாஷ் வீரர் ஹரிந்தர் பால் சந்து ஆகியோர் அர்ஜுனா விருது வென்றுள்ளார்கள். போலவே தமிழ்நாட்டைச் சேர்ந்த செஸ் பயிற்றுநர் ஆர்.பி.ரமேஷ், துரோணாச்சாரியார் விருதும், கபடி பயிற்றுநர் கவிதா செல்வராஜ், வாழ்நாள் சாதனையாளருக்கான தியான் சந்த் விருதையும் வென்றுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில், இந்தத் தருணத்தில் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தருணத்தில், கேலோ இந்தியா இளையோர் போட்டிகளின் சாராம்சம் என்னவென்று சற்று நினைத்துப் பார்ப்போம். வெறுமனே திறமைகள் சங்கமிக்கும் நிகழ்வு மட்டுமல்ல இது. மாறாக, மனிதநேயம், புத்தெழுச்சி, நிபுணத்துவத்துக்கான உழைப்பு ஆகியவற்றைக் கொண்டாடும் நிகழ்வாகவும் இது அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டின் வளமான விளையாட்டு வரலாற்றின் பின்னணியில், களத்தில் விளையாடும் வீரர்களின் கனவுகள் நனவாவதைப் பார்க்க இன்று நாம் ஒன்று கூடியிருக்கிறோம்.

வீரர்கள் போட்டியிடும் மைதானங்கள், நமக்கு வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக்கொடுக்கும் வகுப்பறைகளாகவும் விளங்குகின்றன.

இதில் போட்டியிடப் போகும் வீரர்களே... நீங்கள் போட்டியாளர்கள் மட்டுமல்ல. எண்ணற்ற இலட்சியங்கள், கனவுகளின் தூதுவர்கள்.

### இலட்சிய வேட்கையைத் தூண்டும் சுடராகவும் அமையட்டும்!

உங்களுடைய அர்ப்பணிப்பு, கடின உழைப்பு மற்றும் விளையாட்டுத் துறை நேர்மை எங்களுக்கு எப்போதும் உந்துசக்திகளாக இருக்கின்றன. களத்தில் இருக்கும் ஒவ்வொரு கணத்தையும் மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள். சவால்களை ஆரத் தழுவுங்கள். மைதானத்துக்கு வெளியேயும் உங்கள் போட்டியாளர்களுடன் நட்பை வலுப்படுத்திக் கொள்ளுங்கள்.

நமது இளைஞர்களின் விளையாட்டு முயற்சிகளுக்கு ஆதரவும் ஊக்கமும் அளிப்போம் என்று இந்தச் சமயத்திலே நாம் உறுதியேற்றுக் கொள்வோம்.

இந்தப் போட்டிகள் ‘வேற்றுமையில் ஒற்றுமை’யின் அடையாளமாகவும், ஒவ்வொரு இளம் வீரரின் மனத்திலும் இலட்சிய வேட்கையைத் தூண்டும் சுடராகவும் அமையட்டும்.

தமிழ்நாட்டில் 2023 கேலோ இந்தியா இளையோர் போட்டிகளைத் தொடங்கி வைக்கும் இந்த நேரத்தில், விளையாட்டுத் துறையில் நமது ஈடுபாடு பல்கிப் பெருகி, வருங்காலத் தலைமுறைகளை ஈர்க்கும் ஒன்றாக இருக்கட்டும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்!

# கலைஞரும் நானும் 50

“தமிழ்நாட்டு மக்களுக்கு, தான் இருந்த வரை தலைப்புச் செய்திகளை அளித்தவர் கலைஞர். இன்றைக்கு முக்கியமான செய்தி என்ன எனத் தெரிந்துகொள்ள வேண்டுமெனில், கலைஞர் எதைக் குறித்துப் பேசி இருக்கிறார் எனத் தெரிந்து கொண்டால் போதும். அப்படியான தலைவர், கலைஞர்” எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார் இயக்குநரும் நடிகருமான பாண்டியராஜன்.

■ இயக்குநர் **பாண்டியராஜன்**

## “இவனுக்கு எதுக்கு இந்த வேலை என்றார்!”



“தலைவர் கலைஞர் அவர்களை கலைத்துறை நிகழ்ச்சிகளில் பலமுறை பார்த்திருக்கிறேன். ஆனால், அவரோடு அதிக உரையாடல், அதிக சந்திப்புகள் இல்லை. ஆனால், ஒரு சில சந்திப்புகளாக இருந்தாலும் அவர் போல அன்பு பாராட்டியவர் யாருமில்லை. “வாய்யா... பாண்டியராஜா...” என்பார்.

### அன்பே இயல்பு

கலைஞர் அவர்களின் ‘டைமிங்’ குறித்து வியப்பாக இருக்கும். பரபரப்பான நேரங்கள், டென்ஷன் எல்லாவற்றையும் கடந்து எப்படி அவ்வளவு நகைச்சுவையாகப் பேசமுடிகிறது என வியப்பேன். அந்த நகைச்சுவை உணர்வுதான் அவருடைய டென்ஷன்களை மறக்க வைத்துக் கொண்டிருந்தது.

கலைஞர் அவர்களிடம் பணியாற்றியவர் எனது மாமனார். எனது திருமண நிச்சயதார்த்தத்துக்கு வந்திருந்தார் கலைஞர். அவருக்குப் பக்கத்தில் திருமண மாப்பிள்ளை நான் அமர்ந்திருந்தேன். புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்த நேரத்தில், கலைஞர் என்னிடத்தில் “உன் மாமனார பத்தி உனக்குத் தெரியுமா” எனக் கேட்டார். “இல்லீங்களே அய்யா” என்றதும், “ஒரு டைப்பான ஆளுய்யா” என்று கூறி, என் மாமனார் குறித்த ஒரு சுவையான சம்பவத்தைச் சொன்னார்.

அப்போது வந்த என் மாமனார் “அய்யா என்னைப் பத்தி ஏதோ பெரிய விஷயமா சொல்றீங்க போல” என்றார். அதற்கு, “ஆமா, ஆமா, உன் பெருமையைத்தான் சொல்லிக்கிட்டிருக்கேன்” என கலைஞர் கூற, அந்த இடமே கலகலப்பாக இருந்தது. தன்னிடம் பணியாற்றியவராக இருந்தாலும், அவர்களுக்குக் கொடுத்த இடம், அந்த நிகழ்ச்சியில் குடும்ப உறவுகளைப் போல சின்னச் சின்ன விஷயங்களைப் பேசி மகிழ்ந்தது எல்லாம் மறக்க முடியாத நிகழ்வுகள். அவரது உயரத்துக்கு அந்த இடத்தை அப்படிக் கையாள்வது எல்லாம் இயல்பான விஷயமில்லை. ஆனால், கலைஞர் இருந்தார். அது அவரது இயல்பாக இருந்தது.

### பாராட்டாகச் சொன்ன பாடம்

திரைப்பட முன்னோட்டக் காட்சிகளுக்கு வந்தால், அந்தப் படம் குறித்து, அவர் சொல்லும் கருத்துகள் நுட்பமாக இருக்கும். நான் ‘நெத்தியடி’ என்கிற திரைப்படத்தை இயக்கினேன். என் மாமனார் தயாரிப்பாளராக இருந்தார். அந்தப் படத்தில் இசையமைப்பாளராகவும் பணியாற்றினேன். படத்தில் ஒரு பாடலில் நானும் நடனம் செய்திருந்தேன். அந்தப் பாடலுக்கு ‘அல்ட்ரா வயலெட்’ என்கிற ஒளிப்பதிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இருந்தேன். அதுபோல அந்தப் பாடலில் அதிக ‘கெட்டப்’ களிலும் வந்தேன். அந்தப் பாடல் புதுமையாக வந்திருந்தாலும் யாரும் பாராட்டவில்லை.

கலைஞர் முன்னோட்டக் காட்சிக்கு வந்து பார்த்தார். அந்தப் பாடல் காட்சியின்போது, கலைஞர் என் மாமானாரிடம் ‘உன் மாப்பிள்ளை நல்லா ஆடியிருக்கான்யா’ என்றார். அவர் பின்னால் நின்றிருந்த எனக்கு, அந்த வார்த்தைகள் அவ்வளவு உற்சாகத்தை அளித்தன. எனது நடனத்தைக் கலைஞரே பாராட்டிவிட்டார் எனப் பெருமையடைந்தேன். ஆனால், அடுத்ததாக ‘இவனுக்கு எதுக்கு இந்த வேலை’ என்றார். எனக்கு ‘திக்’ என்று இருந்தது. “கலர் கலரா டிரஸ் போட்டுக்கிட்டு, நடனம் ஆடுறதுக்கெல்லாம் நிறைய பேர் இருக்காங்கய்யா.. இவனுக்குக் காமெடி நல்லா வரும். அத பண்ணத்தான்யா ஆள் இல்லை” என்றார். “இதுல உனக்கு செலவு நிறைய வெச்சிருப்பானேய்யா” என்றார். அந்தப் படத்தின் இயக்குநராக என்னால் கணிக்க முடியாதவற்றை அந்த இடத்திலேயே சொல்லிவிட்டார் கலைஞர்.

> “கலைஞர் உன்ன திட்டுறார்ய்யா? என்னய்யா நீ நடிச்ச? உன்ன உடனே வரச் சொன்னார்ய்யா !"

நான் இதைச் செய்தால், மக்கள் ரசிப்பார்கள் என்பதைத் தப்பாகப் புரிந்து வைத்திருந்தேன். ஆனால், மக்கள் யாரிடம் என்ன எதிர்பார்ப்பார்கள் என்பதை அறிந்த மாபெரும் இயக்குநர் அவர். அவர் சொல்வது சரியான கணிப்பாக இருந்தது. மக்கள் என்னிடம் என்ன எதிர்பார்ப்பார்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கு கலைஞர் அவர்களின் அன்றைய வார்த்தைகள் எனக்குப் பாடமாக இருந்தன.

### ‘ட்விஸ்ட்’டை கண்டுபிடித்தார்!

யாரும் கவனிக்கத் தவறும் நுட்பமான விஷயங்களை அவர் கவனித்துவிடுவார். ‘நம்ம நாட்டுப் பொண்ணு’ என்கிற படம் எடுத்தேன். அந்தப் படத்துக்கான நாயகி முடிவாகவில்லை. அப்போது அந்த நாயகி, படத்தில் எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு ‘மாடல்’ வரைந்திருந்தேன். அதில் கதாநாயகி கூடையைத் தூக்கிக் கொண்டு போவதுபோல பின்பக்கமாக வரைந்திருந்தேன். டிசைனில் என் முகம் மட்டும் இருக்கும். அதையே படத்துக்கான அழைப்பிதழாக அச்சிட்டிருந்தேன்.

அழைப்பிதழ்களை வாங்கிய பலரும், ‘டிசைன் புதுசா இருக்கே’ என வியந்தனர். கலைஞர் அவர்களுக்கு அழைப்பிதழ் அளிக்கிறேன். வாங்கிப் பார்த்தவர் “கதாநாயகி யார் என்று இன்னும் முடிவு செய்யலையா?” என்றார். அந்த டிசைனைப் பார்த்து ரசித்து, அதில் இருந்த ஒரு ட்விஸ்டை சரியாகக் கண்டுபிடித்தார். அவரது நுணுக்கத்தை அறிந்ததும், எனக்கு வியப்பாக இருந்தது.

### இலக்கணம் கற்றுக் கொடுத்தார்

கலைஞரின் **‘குறளோவியம்’** நூலின் ஒவ்வொரு குறளையும் குறும்படமாக எடுத்தார்கள். ஒருநாள் எனக்கு அழைப்பு வந்தது. ‘கலைஞர் அழைக்கிறார்?’ என்றார்கள். அப்போது கலைஞர் முதலமைச்சராக இருந்தார். “என்ன சார் திடீர்னு கலைஞர் அழைக்கிறார்” என அவருக்கு நெருக்கமான ஒருவரிடம் கேட்டேன். “குறளோவியம் குறும்படத்தின் ஒரு பகுதியில் நீங்க நடிக்கணும்னு விரும்புகிறார்” என்றார். எனக்குத் ‘திக் திக்’ என இருந்தது. “ஏங்க நான் சைதாப்பேட்டை. நான் சென்னை மொழியில பேசுவேன். அவரது தமிழ் என்னால பேசமுடியாதுங்களே” என்றேன்.

நான் கலைஞர் அவர்களைச் சந்தித்த போது, அவர் எழுதிய வசனங்கள் தூய தமிழில் இருந்தன. அதை எப்படி உச்சரிக்கணும் என்பதையும் சொல்லிக் காட்டினார். ராஜா வேடத்தில் ஷூட்டிங், டப்பிங் எல்லாம் முடிந்துவிட்டது. அடுத்த நாள் இயக்குநர் சொர்ணம் அவர்கள் அழைத்து “கலைஞர் உன்ன திட்டுறார்ய்யா? என்னய்யா நீ நடிச்ச? உன்ன உடனே வரச் சொன்னார்ய்யா" என்றார்.

நான் கலைஞரைச் சென்று சந்தித்தேன். கோபத்தோடு இருந்தார். “நான் என்ன எழுதிக் கொடுத்திருக்கேன், நீ என்ன பேசியிருக்க?” என்றார். “அய்யா நீங்க கொடுத்ததுதான் நான் பேசினேன், மாற்றி எதுவும் பேசலயே” இது நான். “என்ன பேசுன? ஒரு வல்லினம், மெல்லினமே இல்லை” என்றார் அவர். “அப்படின்னாங்க” என்கிறேன் நான். உடனே சிரித்துவிட்டார். “வல்லினம், மெல்லினம் தெரியல... எப்படிய்யா குறளோவியத்தில் நடிச்ச?” என்றவர், ‘நாளைக்கு என்ன வேலை இருக்கு?’ எனக் கேட்டார். அடுத்த நாள் சென்றதும் எனக்கு எப்படி உச்சரிப்பு வருமோ, அதற்கேற்ப வசனத்தில் வல்லின, மெல்லின உச்சரிப்புகளை மாற்றி எழுதிக் கொடுத்து, டப்பிங் அனுப்பினார். நமக்கு வராததையும் வரவைப்பவராக இருந்தவர் கலைஞர். ஒருவர் மீது அக்கறை கொண்டிருந்தால், கலைஞர் அவர்கள் காட்டும் அன்பு வாழ்நாள் நினைவுகளில் நிற்கும்.

அவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்களில், ‘எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல்’ என்பதை நான் பல இடங்களில் குறிப்பிடுவேன். அதை என் வாழ்நாளில் கடைப்பிடித்து வருவதற்கு அவரே காரணம். கலைஞர் குறித்த நினைவுகளைப் பகிர்ந்து கொள்வது என்பதெல்லாம் நான் பெற்ற பேறே...!.

...பகிர்வார்கள்

## கழகங்களும் கோயில்களும்- மறைக்கப்படும் வரலாறு!




ஆலயத்தில் அரசுக்கு என்ன வேலை? இந்துக் கோவில்களை இந்துக்களிடம் (எந்த இந்துக்களிடம்) ஒப்படைக்கவேண்டும், அறநிலையத் துறையைக் கலைக்க வேண்டும், கோவில்களை மட்டும் நிர்வகிக்கும் அறநிலையத்துறை பிற மத வழிபாட்டுத் தலங்களையும் நிர்வகிக்குமா? என்ற கேள்விகள் அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாகக் குறிப்பிட்ட சிலரால் திரும்பத் திரும்ப வைக்கப்பட்டு தோல்வியுற்ற வாதங்கள்.

நாத்திகக் கொள்கைகளைப் பேசிய திராவிட இயக்கம், வழிபாட்டு உரிமைகளுக்காகப் போராடியது ஏன்? அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்று கோரிக்கை வைத்தது ஏன்? தி.மு.க. இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றியது ஏன்? நீதிக்கட்சி ஆட்சிக் காலத்திலேயே அறநிலையத் துறை உருவாக்கப்பட்டது ஏன்? என்ற கேள்விகளுக்கு விடை தேடினால், மேலே எழுப்பப்படுகிற கேள்விகளுக்கு எளிமையாக விடை கிடைத்துவிடும்.

அந்தப் பணியை மிகச் சரியாகச் செய்திருக்கிறது ஆ.மலைக்கொழுந்தன் எழுதியிருக்கிற ‘கழகங்களும் கோயில்களும்’ நூல். நன்செய் பிரசுரத்தின் வெளியீடாக வந்திருக்கும் இந்நூல், அறநிலையத் துறை உருவாவதற்கு முன் கோயில்கள் யாருடைய ஆதிக்கத்தின் பிடியில் சிக்கியிருந்தன, சமஸ்கிருதம் புகுத்தப்பட்டது எப்படி? கோயில்களின் சொத்துக்கள் சுரண்டப்பட்டது எப்படி? அவற்றில் இருந்து கோயில்களையும் வழிபாட்டு உரிமையையும் அறநிலையத்துறை பாதுகாத்தது எப்படி? அதற்காக தி.மு.க கொடுத்துக் கொண்டிருக்கும் உழைப்பு என்ன என்பதையெல்லாம் சிறப்பான முறையில் விளக்குகிறது. விதண்டா வாதங்களை எதிர்கொள்ள விளக்க ஏடாகப் பயன்படும் இந்த நூல்.

## :ப்ளாஷ்பேக்



### உள்ளாட்சி வெற்றிப் படம்!

1986-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றிபெற்றது. அப்போது இருந்த எம்.ஜி.ஆர் தலைமையிலான அ.தி.மு.க வேட்பாளர்கள், தமிழ்நாடு முழுவதும் பெரும் தோல்வியைத் தழுவினார்கள். கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சோர்வில்லாப் பிரச்சாரத்தால், கழகம் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் வெற்றி பெற்றது. அந்த நேரத்தில் நான், எனது தாத்தா, சித்தப்பா ஆகியோர் தலைவரை **‘கோபாலபுரம் இல்லம்’** சென்று வாழ்த்துகளைத் தெரிவித்த போது இந்தப் படம் எடுக்கப்பட்டது.



பழனிகுமார்

**-பழனிகுமார், அயனாவரம், சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அதிக வசனமும் – அழகாகப் பேசியதும்!

**2000 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் கலைவாணர் அரங்கத்தில் கலைஞர் எழுதிய ‘சங்கத்தமிழ்’ இசை நாட்டிய நாடகத்தின் 150-வது வெற்றி விழா நடைபெற்றது. அந்த மேடையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் கலந்துகொண்டு பேசினார். கலை உலகத்தில் கலைஞர், தனக்குத்தான் அதிகமாக வசனம் எழுதி இருக்கிறார் என்றும், தான் அதிகமாகப் பேசியதாகவும் குறிப்பிட்டார். அதற்கு பதிலளித்த கலைஞர் “அதிகமாகப் பேசியது மாத்திரமல்ல, மிகவும் அழகாக என்னுடைய வசனங்களைப் பேசியதும் நீங்கள்தான்” என்றார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 338




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131